# இளவேனில்

## கேசி தமிழ் மன்றம்

இதழ் 16 - ஆடி 2019



ILAVENIL - CASEY TAMIL MANRAM INC
ISSN 2200-789x

Customer Satisfication

LOWEST PRICE

# Flooring
# Kitchen cabinet

## Importing direct from factories
## Experienced professionals
## 100% Customer Satisfaction

0415081989

4/55 Scott Street, Dandenong
VIC 3175, Australia

## www.sunplanet.com.au



## பார்வைக்கு


சஞ்சிகை : இளவேனில் -16
வெளியீடு : 21 ஆடி 2019
வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்
ஆசிரியர் குழு : சத்தியா & சத்தியன்
வடிவமைப்பு : க. பார்த்தீபன்
அட்டைப்படம் : சத்தியா
தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
Editor@caseytamilmanram.org.au
PO Box 2516


## பொருளடக்கம்


- ஆசிரியரின் உள்ளத்திலிருந்து 1
- தலைவர் உள்ளத்திலிருந்து 2
- சிலப்பதிகாரத்தின் பாத்திரங்களைக் கொன்றது 'செங்கோன்மை தவறியதா' 3
- தமிழ் மொழி ஏன் கற்க வேண்டும் 4
- அவரைக் கண்டேன் 5
- தஞ்சை பெரிய கோவில் 6
- பயம் 6
- அவுஸ்திரேலியாவில் தமிழும் தமிழர் கலாச்சாரமும் 7
- வில் படி திரன் தோள் வீர! நோக்குதி 8
- அன்புள்ள நண்பருக்கு 9
- அன்னை, இயந்திரம் 10
- எனது கல்வி சுற்றுலா 11
- ஊக்கம் 12
- கேசி தமிழ் மன்றம் 12
- தமிழே என் தாய்மொழியே 13
- செல்லப் பிராணி உஞ்சு 13
- மனம் உண்டானால் 19
- வீட்டில் தமிழ் பயில்வதும் பயிற்றுவிப்பதும் 20
- மனிதம் காப்போம் - 21
- நிலா நிலா ஓடி வா 23
- வீடும் நாடும் 24
- நான் 25
- ICC World cup 2031, அவுஸ்திரேலியா 26
- தமிழர்களின் கணிதம் 26
- " அரிது அரிது மானிடராதல் அரிது 27
- குளிருக்கு காபி குடிக்கலாமா? 27
- தமிழ் புத்தாண்டும் தமிழர்களும் 28
- ஆகா அது போதும் 28
- எனக்குப் பிடித்த செல்லப் பிராணி 28
- புத்தகத்தின் சுயசரிதை 29
- பண்டார வன்னியன் 29
- மனம் கவர்ந்த தமிழ்க் கவிஞர் 30
- உங்களுக்கு தெரியுமா 31
- அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம் 33
- எனக்குப் பிடித்த செல்லப் பிராணி 33
- எனது விடுமுறை 33
- என் செல்லப் பிராணி 34
- பொறாமையின் விளைவு 34
- விளையாட்டுப் போட்டி 34
- வீட்டுத்தோட்டம் 34
- அன்பு 35
- எனது கிளி 36
- எனது நோய்வாய்ப்பட்ட மீன் 36
- ஒரு நாள் ஒரு முயல் 36
- அவுஸ்திரேலியா 36
- நமக்கு உதவுவோர் 36
- தங்க மீனும் நானும், எனது தாய் நாடு 37
- ஆரோக்கியமே செல்வம் 37
- நட்பு, எனது வீட்டுத்தோட்டம் 38
- நண்பன், தோட்டங்கள் 38
- நான் கழித்த விடுமுறை நாட்கள் 39
- தங்க மீன், வீரா 39
- பொறாமையின் விளைவு 40
- எனது வீடு, சுத்தமான மின்சக்தி 40
- கழுதையும் குதிரையும் 40
- குறுக்கெழுத்துப் புதிர் 41
- அட்டைப் படம் 42
- திரும்பி வா 43

# ஆசிரியரின் உள்ளத்திலிருந்து....

இன்று உலகம் முழுவதும் மொழி பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றாலும் தமிழ் மொழி பற்றிய ஆய்வுகளும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளும் மும்முரமாக இடம்பெறுகின்றது. இந்த ஆய்வுகள் எல்லாம் தமிழ் மொழியை வாழவைக்கவும் எவ்வாறு அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லலாம் என்றும் நடைபெறுகின்றன.

எழுத்துத் திறமையுள்ளவர்கள் அவர்களது ஆக்கத்திறமையை வெளிக்கொணர வேண்டும் என்ற ஆவலுடன் நாம் உழைக்கின்றோம். அவர்களுக்காக இளவேனில் களம் அமைத்துக் கொடுக்கின்றது. இதில் அனைவரும் தங்களது ஆக்கங்களை எழுதி தங்களையும் ஒரு தமிழ் எழுத்தாளராக இந்த புலம் பெயர்ந்த நாட்டில் நிலை நிறுத்தவேண்டும்.

இளவேனிலுக்கு ஆதரவு தருவோர், எழுதுவோர் மிகச் சிறிய வட்டத்திற்குள் நின்றது. ஆனால் இந்நிலை மாறி வருகின்றது. இதழுக்கான ஆங்கங்கள் பல இடங்களில் இருந்து வருகின்றது. இதுவே இந்த இதழுக்கான வெற்றியாக இருக்கின்றது. இவ் வெற்றி தொடரவேண்டும் உங்களது ஊக்கம் எமக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும். தமிழும் தமிழரும் தம்மை தொடர்ந்து அடையாளப்படுத்த இது போன்ற சஞ்சீகைகள் தொடரும்.

அரை ஆண்டுக்கு ஒன்று என்று வெளிவரும் சஞ்சிகையை காலாண்டுக்கு ஒன்று என்று வெளியீடும் நிலைக்கு கொண்டு வரவேண்டியது இளவேனில் சஞ்சிகையை வாசிக்கும் வாசகர்களாகிய உங்களிடம் விட்டு விடுகிறோம், இந்த தார்மீகப் பொறுப்பு இலகுவானதல்ல! இந்தச் சுமையை ஒவ்வொருவரும் சுமப்போமானால் இளவேனில் சஞ்சிகை சிறப்பான வெளியீடாக வெளிவரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. ''தமிழ் எங்கள் மொழி! உரக்கச் சொல்வோம். தமிழ் எங்கள் அடையாளம்! நிலைக்கச் செய்வோம்''

நன்றி!

ஆசிரியர் குழு.

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

ஆடிமாதம் பிறந்தாலே விழாக்களுக்கும் மகிழ்ச்சிக்கும் குறைவில்லை. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்று ஆடிப்பாடும் சிறுவர்கள் ஒரு புறம், ஆடிப்பட்டம் தேடி விதை என்று மகிழ்கின்ற உழவர்கள் இன்னொரு புறம், ஆடிவெள்ளி, ஆடிப்பூரம் என்றெல்லாம் நிகழ்கின்ற சமய நிகழ்வுகள் வேறொரு புறமாக எங்கும் களிப்பு கரைபுரண்டோடும் காலமிது.

இத்தகைய மகிழ்வான வேளையில் கேசி தமிழ் மன்றத்தின் ஆடிப்பிறப்பு விழா வழமை போன்று இம்முறையும் டாண்டினோங்கில் அமைந்துள்ள *Menzies* மண்டபத்தில் மிகச்சிறப்பான முறையில் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழர்தம் பாரம்பரிய கலைச்செழிப்பை வெளிக்கொணரும் சிறுவர் நிகழ்வுகள், வளர்ந்து வரும் இளவயதினைர் வழங்கும் நிகழ்ச்சி, எல்லோரையும் கவரக்கூடிய பட்டிமன்றம் உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகள் இன்றைய விழாவில் அரங்கேற இருக்கின்றன. இத்துடன் கேசி தமிழ் மன்றத்தின் அரையாண்டு சஞ்சிகையான இளவேனில் சஞ்சிகையும் புதிய பல ஆக்கங்களுடன் சிறப்பாக வெளியிடப்படவிருக்கிறது.

அது மட்டுமா. நாவுக்கு சுவையான ஆடிக்கூழ், கொழுக்கட்டை போன்றவற்றுடன் சுவையான இரவு விருந்தும் வழங்கப்படவிருக்கிறது.

கேசி தமிழ் மன்றத்தில் இதுவரை அங்கத்தவர்களாக சேராதவர்கள் மற்றும் உறுப்புரிமையை நீடிக்க விரும்புபவர்கள் மண்டபத்தில் கணணியுடன் நடமாடும் தகவல் தொழில்நுட்ப மன்ற உறுப்பினர்கள் மூலமாகவோ அல்லது கணக்காளர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களை அணுகுவதன் மூலமாகவோ அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம். ஆண்டு சந்தா தலைக்கு 10 வெள்ளிகள் அல்லது குடும்பத்திற்கு 20 வெள்ளிகள் மட்டுமே.

மீண்டும் கேசி தமிழ் மன்ற குடும்பத்தினருடன் இணைந்து இனிவரும் நாட்களும் இனிதாக அமைய வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி

க. மணிவண்ணன்

தலைவர்

கேசி தமிழ் மன்றம்

# சிலப்பதிகாரத்தின் பாத்திரங்களைக் கொன்றது 'செங்கோன்மை தவறியதா'

*- ஆரூரன் மதியழகன் -*

*வாழ்க்கையில் நாம் மிக முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது எல்லாப் பக்கங்களையும் ஆராய்ந்து நடுநிலை தவறாமல் ஒரு நேர்மையான முடிவுக்கு வரவேண்டும். இதை செய்யும்போது எம் விருப்பு வெறுப்புகள் தீர்மானத்தைப் பாதிக்காமல் கவனிப்பது அவசியமானது. இதைத்தான் திருவள்ளுவர்,*

*"ஓர்த்து கண் ணோடாது இறை புரிந்து பார்மாட்டும்*

*தேர்ந்து செய் வக்தே முறை" என்று கூறினார். குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல் வழங்கப்படுவதே நீதியாகும்.*

*'சிலப்பதிகாரம்' தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், சேர நாட்டின் இளங்கோ அடிகளால் இது எழுதப்பட்டது. இக்காப்பியத்தில் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் கைகளில் கோவலன் அநீதியாக இறந்தபின், கோவலனின் மனைவி கண்ணகி கோபத்தில் மதுரை நகரத்தை எரிக்கிறாள். செங்கோன்மை தவறியதால் கோவலன் இறக்கிறான். தொடர்ந்து பாண்டிய மன்னனும் இறக்கிறான். கடைசியாக மதுரை நகரமே எரிக்கப்படுகிறது. இதன் மூலம் செங்கோன்மையின் முக்கியத்தை இளங்கோ அடிகள் வலியுறுத்துகிறார். அதே வேளை ஊழ்வினை உறுத்தலும் மனசாட்சியும் இந்தப் பாத்திரங்கள் அழிவதற்கு காரணமாக எழுதினார்.*

*இக்காப்பியம் செங்கோன்மை பின்பற்றுதலின் தேவையை வெளிக்காட்டுகிறது. பாண்டிய மன்னன் ஒரு நீதி தவறாத மன்னனாக ஆட்சி செய்தார். பாண்டிய மன்னனின் நேர்மையும் செங்கோன்மையும் அவன் கோபத்தில் பொங்கிய கண்ணகியின் குறையை அலட்சியப்படுத்தாமல் காது கொடுத்து நிதானமாகக் கேட்பதில் தெரிகிறது. ஆனால் அரசியின் பொற்சிலம்பு தொலைந்த கணத்தில் சிந்திக்காமல் அவன் சொன்ன "கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென்" என்ற வார்த்தை கோவலனைக் கொன்று நீதி வழுவுகின்றது. இளங்கோ அடிகள் செங்கோன்மை தவறியோர்க்கு தண்டனை கிடைக்கும் என்பதை விளக்க, "அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்" என்று எழுதினார். பாண்டிய நெடுஞ்செழியன் நடுநிலைமை தவறி கோவலனை கொன்றதால் இறக்கின்றார். இதில் செங்கோன்மையின் தத்துவத்தை சிறப்பாகக் காட்டப்படுகிறது.*

*அரசனின் இறப்பிற்கு செங்கோன்மை தவறியது மட்டுமல்ல, அவனின் மனசாட்சியும் ஒரு காரணம். மன்னன் நெடுஞ்செழியன் செங்கோன்மை தவறி இருந்தாலும் அவன் மனசாட்சியுள்ளவன். வாழ்க்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் சிந்திக்காமல் கோவலனைக் கள்ளன் என்று தீர்ப்பு வழங்கினான். அது பிழை என்று உணர்ந்த கணமே, அறியாமல் செய்த தவறென்றாலும் பிழையைப் பொறுக்காமல் உயிரை விட்டார்.*

*"யானோ அரசன்? யானே கள்வன்?" என்று அவன் கூறி மனசாட்சியுள்ளவன் என்பதை வலியுறுத்துகின்றான். செங்கோன்மை தவறாமல் நீதியான அரசனா அல்லது கோவலனின் சிலம்பைத் திருடி பிழையாக தணடனை கொடுத்த கள்வனா என்று அவன் சிந்திக்கிறான். இளங்கோ அடிகள் பாண்டிய மன்னன் ஒரு செங்கோன்மை பின்பற்றிய அரசன் என்று எழுதியிருக்கிறார். ஆனால் பிழை செய்து மனசாட்சி உறுத்தியதால் இறந்தார் என்பதை வாசிப்பாளர்களுக்கு காட்டுகிறார்.*

*கோவலன் இறந்ததற்கு செங்கோன்மை தவறியது வழிவகுத்திருந்தாலும் அவன் இறப்புக்கு காரணம் ஊழ்வினையாகும். கோவலன் கண்ணகியை விட்டு விலகி மாதவியுடன் வாழ்ந்தது மிகப் பெரிய தவறானது. இது நிச்சயமாக தண்டிக்கப்பட வேண்டிய தவறு. அந்தத் தவறே அவன் அழிவிற்கு காரணமானது. தன வினை தன்னை சுடும் என்பதைக் கோவலன் இக்காப்பியத்தில் விளக்குகிறான். "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்று இளங்கோ அடிகள் எழுதியிருக்கிறார். கோவலனின் முடிவால் இளங்கோ ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வாசிப்பாளர்களுக்கு கற்பிக்கிறார். ஊழ்வினையும் பாத்திரங்களைக் கொன்றது.*

*நடுநிலைமை தான் வாழ்க்கையின் சரியான முறை என்று நாம் நம்புவது சுலபமானது. ஆனால், முடிவு தீர்மானிக்கும்போது நாம் செங்கோன்மை தவறியது அதிக சுலபமானது. இக்கருத்தை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இளங்கோ எழுதினார். சிலப்பதிகாரத்தின் முடிவின் மூலம் இளங்கோ அடிகள் செங்கோன்மையினதும், மனசாட்சியினதும், ஊழ்வினையினதும் பலனை எமக்கு விளக்குகிறார்.*

*"எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்*

*தண்பதத்தான் தானே கெடும்" என்று திருவள்ளுவர் செங்கோன்மை பற்றிக் கூறினார்.*

## **தமிழ் மொழி ஏன் கற்க வேண்டும் -** *கௌசிதா சிவயோகன். -*

*நவீன காலத்தில் உலகம் ஒவ்வொரு நாளும் மாறுகிறது. தொழில்நுட்ப வசதிகள், விஞ்ஞான வசதிகள் என்ற பல வசதிகள் அதிகரித்து வருகிறது. இன்றைய காலம் பல மாற்றங்கள் அடைந்து வருகிறது. ஆகவே இந்த நவீன காலத்தில் ஒரு மனிதரின் கலாச்சாரமும், அவர்கள் பேசும் மொழியும் மிக முக்கியமாகும். இக்காரணத்தினால் மாணவர்கள் தமிழ் மொழியை கற்பது மிக முக்கியம்.*

*''தமிழுக்கு அமுதென்று பெயர்'' என்ற முதுமொழிக்கு அமைய தமிழ் மொழியும் கலாச்சாரமும் தனித்துவமானது. இந்த அருமையான மொழியை கற்பது எங்கள் கடமை மட்டும் அல்ல, இந்த வாய்ப்பு எங்களுக்கு கிடைத்த ஒரு வரம். தமிழ் மொழியை கற்பதால் மாணவர்களுக்கு பல நன்மைகள் அளிக்கும். முதலில் தமிழ் மொழியை கற்பதால் எங்கள் தாய் மொழியில் உரையாடல், எழுத்து, வாசிப்பு என்ற திறமைகளை முன்னேற்ற முடியும்.*

*ஆகவே தமிழ் மொழி தெரிந்தால் தமிழ் கலாச்சாரம் பற்றி அறிந்து கொள்ளவும் முடியும். ''ஆள் பாதி ஆடை பாதி'' என்ற பழமொழிக்கு அமைய மாணவர்கள் தமிழ் கலாச்சார ஆடை அழகாக அணிந்து நாம் தமிழர்கள் என்று பெருமையுடன் காட்ட முடியும். அத்துடன், உயர் தர பாடசாலையில் பத்தாம் வகுப்பிலேயே தமிழ் பரீட்சை செய்ய முடியும். இதனால் மற்றப் பாடங்கள் செய்யும் போது, இந்த அனுபவத்தை பயன்படுத்த முடியும். எதிர் காலத்திலும் வேலை தேடும் போது நாங்கள் தமிழ் மொழி பரீட்சை செய்ததால், வேறு மொழியில் உரையாடும் திறமை இருக்கிறது என்று தெரிந்து வேலை கிடைக்க வாய்ப்புகள் கூடும்.*

*அத்தோடு, ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்ற பழமொழிக்கு அமைய மாணவர்கள் தமிழ் மொழி இளம் வயதில் கற்று இருந்தால் வாழ்க்கை முழுவதும் மறக்காமல் இருப்பார்கள் என்றுக் கூறலாம். ஆனால், மாணவர் இந்த வயதில் கற்கவில்லை என்றால் அவர்களுடைய பிள்ளைகளும் தமிழ் மொழி தெரியாமல், தமிழ் மொழியும் கலாச்சாரமும் அழிந்து போக கூடும். ''அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது'' என்ற பழமொழிக்கு இணங்க தமிழ் மொழி அழிந்து போனால், அதற்கு பின்பு தான் மனிதர்கள் அதன் முக்கியத்துவத்தை பற்றி புரிந்து இருப்பார்கள்.*

*அந்த நிலைமைக்கு நாங்கள் வர விடக் கூடாது. அத்துடன் இலங்கை, இந்தியா நாடுகளில் வளரும் எங்கள் உறவினர்களுடன் பேச வேண்டும் என்றால் தமிழ் கற்க வேண்டும். ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' என்ற பழமொழிக்கு அமைய மாணவர்களுக்கு இங்கு இருக்கும் தமிழ் படிக்க வாய்ப்புகளும் வசதிகளும் பயன்படுத்தி பலன் அடைய வேண்டும். அதுவும் எங்கள் தமிழ் நண்பர்களுடன் மிக நெருக்கமான நட்புறவு இருக்கும். ஏனென்றால், அவர்களுக்கு தான் தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் பற்றி நன்கு புரியும்.*

*''முகநக நட்பது நட்பு நெஞ்சத்து அகநக நட்பே நட்பு''*

*என்ற திருக்குறளுக்கு இணங்க தமிழ் கலாச்சாரத்தில் எல்லோரும் ஒரே குடும்பமாக இருக்கிறோம் என்று கூறலாம். ஆகவே எங்களுக்கு இடையில் மற்றவர்களுக்கு இடையில் இல்லாத ஒரு சிறந்த உறவு இருக்கிறது.*

*இறுதியாக, தமிழ் மொழி கற்பது மிக முக்கியமாகும். அதை கற்பதால் படிப்புக்கும், எதிர் காலத்திற்கும், வாழ்க்கை முழுவதற்கும் நன்மைகள் உண்டாகும். இந்த வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காது, இது எங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வரம். பெருமையுடன் நம் தமிழர்கள் தாய்மொழி தமிழ் பேசுவோம், தரணி எங்கும் தமிழ் வளர்ப்போம்!*

# அவரைக் கண்டேன் !!!

*அவரைக் கண்டேன் இன்று*

*அவரைக் கண்டேன்*

*ஆனந்த கூத்தாடி*

*ஆரவாரம் கொண்டேன்*

*ஆனாலும் ஒரு கணம் கோபம் கொண்டேன்*

*ஆறு வாரத்தில் வருவாய் என்று*

*ஆவலுடன் காத்திருந்தேன்*

*அல்லும் பகலும் பார்த்திருந்தேன்*

*ஈராறு ஆனபின்பும்*

*வாராமல் போக*

*வாடிநின்றேன்*

*மனவாட்டம் கொண்டேன்*

*வெயிலென்று பாராமல்*

*வேர்க்குதென்று பிதற்றாமல்*

*வேளைதோறும் காத்துவந்தேன்*

*பாசத்தோடு பரிவும் கொண்டேன்*

*பாரபட்சமின்றி பார்த்து வந்தேன்*

*என்ன குறை வைத்தேனென்று*

*எனை நானே கேட்டிருந்தேன்*

*கண்டு கொண்டேன் - நீ*

*பாரமுகம் கொண்ட காரணம் என்னவென்று*

*அந்த ரோஜாவின் மீது உனக்கிருந்த மோகமென்று........*

*-விஜி ராம்-*

# தஞ்சை பெரிய கோவில்

- விஷ்ணுப்பிரியன் -

*சிலர் பிரகதீசுவரர் ஆலயம் என்று அழைப்பார்கள். மற்றவர்கள் தஞ்சை பெரிய கோவில் என்று சொல்வார்கள். ஆனால் இந்த ஆலயத்தின் உண்மையான தமிழ் பெயர் பெருவுடையார் கோவில். இக்கோவில் கி.பி. 1003 ஆம் ஆண்டு துவங்கி கி.பி. 1010 ஆம் ஆண்டு இராஜ ராஜ சோழன் தலைமையில் கட்டி முடிக்கப்பட்டது.*

*தஞ்சை பெரிய கோவில் தமிழ் நாட்டின் மிக உயரமான கோவில்களில் ஒன்றாகும். இதன் கோபுரம் 216 அடி உயரமானது. அந்த எண்ணிக்கை தமிழில் உள்ள உயிர் மெய் எழுத்துக்களைக் குறிக்கிறது. லிங்கம் மற்றும் நந்தி இடையே உள்ள தூரம் 247 அடி. இது தமிழில் உள்ள எல்லா எழுத்துக்களையும் குறிக்கிறது. நந்தியின் உயரமும் அகலமும் தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் குறிக்கிறது.*

*இக்கோவில் முழுவதும் கிரானேட் கற்களால் கட்டப்பட்டது. ஆனால் 11 ஆம் நூற்றாண்டில் கோவில் கட்டப்படும் இடத்தைச் சுற்றி 500 கி மீற்றருக்கு கிரானேட் கற்கள் கிடையாது. எப்படித்தான் பெரிய எடை உள்ள கற்களை 500 கி மீற்றர் எடுத்து வந்தார்கள் என்ற கேள்வி இன்றும் ஆராய்ச்சியாளர்களைக் குழம்ப வைக்கிறது. இதை போலவே உச்சியில் இருக்கக் கூடிய கோபுரக்கல்லை எப்படி 216 அடி மேலே வைத்தார்கள் என்று இன்றும் தெரியவில்லை.*

*மேலும் இந்த ஆலயத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட தலைமை சிற்பி முதல் கடைநிலை கூலியாள் வரை அனைவரது பெயர்களும் கல்வெட்டில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது போல உலகத்தில் வேறொரு அரசரும் செய்ததில்லை.*

*இக்கோவில் 1987 ஆம் ஆண்டு UNESCO ஆல் உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது. இதை ‘Great Living Chola Temples” என்று அழைத்தார்கள். இவ்வரிய பொக்கிஷத்தை நாம் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது நம் பொறுப்பு.*

# பயம்

-ஆரணன் மதியழகன் -

*எனது வீட்டு பின் தோட்டத்தில், நானும் எனது அத்தான் சாமியும் எங்கள் துவிச்சக்கரவண்டியில் விளையாடிக்கொண்டிருந்தோம். திடீரென, எங்கள் வண்டிகள் பறக்க தொடங்கியது. நிலத்திலிருந்து ஒருபெரிய பெட்டி என்னையும் சாமியையும் தூக்கி கொண்டு ஆகாயத்தில் பறந்தது. இந்த பெட்டி ஒரு கண்ணாடிப் பெட்டி. எனக்கு ஒரு பயம் இருக்கிறது. அது உயரத்திற்கு பயம். நானும் சாமியும் மேலேமேலே போகும்போது, எங்களுக்கு பயம் கூடியது. நான், “நாங்கள் சாகப்போகிறோம். நாங்கள் சாகப்போகிறோம்.” என நினைத்தேன். நானும் அத்தானும், “அம்மா, அப்பா!” என்று கத்தி கத்திக் கொண்டிருந்தோம்.*

*பத்து வருடங்களுக்கு முன்னர், எனது அம்மாவும், அப்பாவும் ஒரு விமான விபத்தில் இறந்து விட்டார்கள். அந்த நேரத்திலிருந்து எனக்கு ஒரு பயம் வளர்ந்தது. அப்போதிலிருந்து, என்னால் உயரமான இடங்களுக்கு போக முடியவில்லை. எனது மாமியும், மாமாவும் என்னை அவர்களின் மகனாக வளர்த்தார்கள். இப்போது தான் இந்த பயம் காட்டியது.*

*நான் எனது வண்டியிலிருந்து இறங்கவேண்டும் என்று முயன்றேன், ஆனால் இந்த பெட்டி என்னை விழ விடுவில்லை. எனது அத்தான் என்னைப் பார்த்து அதே போல் செய்தார். நாங்கள் இந்த பெட்டியை சுத்திப் பார்த்துக்கொண்டோம். பெட்டிக்கு மேல் ஒருவர் நின்று எங்களைக் பார்த்தார். நாங்கள் இந்த பெட்டியை உடைக்கப் பார்த்தோம். எங்கள் வீரத்தை எல்லாம் பாவித்தோம். ஆனால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. திடீரென அந்த மனிதன் எங்களுடன் கதைத்தார். அவர், “வணக்கம் சாமி, லக்ஷ்மனன் எப்படி இருக்கிரீர்கள்? நான் இப்பொழுது உங்களை ஒரு பெட்டிக்குள் பிடித்து வைத்திருக்கிறேன். நீங்கள் தப்பிக்க முடியாது.” சொன்னார். அந்த மனிதனின் குரல் எங்கேயோ கேட்டிருக்கிறேன்.*

*என்னுடைய பெற்றோர்கள் சாகும்போது ஒரு மனிதன் அவர்கள் விழுவதை பார்த்துக்கொண்டு சிரித்துக்கொண்டார். “ஏன் எங்களை இப்படிச் செய்கிறீர்கள். எனது பெற்றோர் சாகும்போது நீங்கள் நின்றீர்கள். ஏன்?” என்று கேட்டேன்.*

அவர், "ஆமாம் லக்ஷ்மனன் நான் அப்போது அங்கே நின்றேன். நான் தான் உங்களின் பெற்றோரை கொன்றேன். சரி லக்ஷ்மனன், உங்களுக்கு தெரியுமா உங்களின் பெற்றோர் என்ன வேலை செய்தார்கள்?" என்று மறு மொழி கொடுத்தார்.

"ஆம் எனக்குத் தெரியும். அப்பா பல் வைத்தியராக வேலை செய்தார். அம்மா மிருக வைத்தியராக வேலை செய்தார்" என்று சொன்னேன். அவர், "இல்ல தம்பி, அவர்கள் உளவாளியாக இருந்தார்கள். அவர்கள் எனக்கு தன்டனை கொடுக்க, என்னுடைய குடும்பத்தை கொன்றார்கள். நான் அவர்களை நிறைய மாதமா தேடிக்கொண்டேன். நான் அவரைக் கொன்ற பிறகு தான் எனக்கு தெரிய வந்தது அவர்களுக்கு ஒரு மகன் இருக்கிறது.

நான் உன்னை தேடிக்கொண்டுடிருந்தேன். இப்போது தான் உன்னை முதல் தரமா பிடிக்க முடிந்தது. எதிர்பாராதவிதமாக உன் அத்தானும் சிக்கிவிட்டார்". முதல் எனக்கு பயம் வந்தது. இவர் எங்களைக் கொல்லப்போகிறார் என்று பயப்பட்டேன். பயத்தில் கை கால்கள் தாளமிட்டன. அதற்கு பிறகு என்னுக்கு கோபம் வந்தது. இந்த மனிதன் சொன்னார் நாங்கள் தப்பிக்கமுடியாது.

இதனால் என்னுடைய கோபம் கூடிக் கொண்டிருந்தது. நான் கோபத்தில் பெட்டியை அடித்து அடித்து கொண்டேன். சாமியும் அப்படியே செய்தார். அப்போது அந்த மனிதன், "நான் இப்போது இந்த பெட்டியின் சுவர்களை கிட்ட கொண்டுவரப்போறென். இந்த பெட்டி உங்களை நசித்துக் கொல்லும்."

அப்போது அவர் ஒரு தொலையியக்கியை எடுத்து சுவர்களை கிட்ட வர வைத்தார். அந்த மனிதன் எப்பவும் சிரித்துக் கொண்டிருந்தார். நாங்கள் கத்திக் கொண்டிருந்தோம் ஆனால் ஒருத்தரும் எங்கள் சத்தத்தைக் கேட்கவில்லை. மாமா வெளியே வந்து எங்களை சாப்பிட கூப்பிட்டார். நான் அவரை உடனை கண்டேன். நான் அவரை கத்தி கத்திக் கூப்பிட்டேன் ஆனால் அவருக்கும் என் சத்தம் கேட்கவில்லை. பெட்டியின் சுவர்கள் கிட்ட கிட்ட வந்துக் கொண்ட. நானும் சாமியும் பெட்டியின் நிலத்தை தொடர்ந்து உதைத்தோம். இதைப் பார்த்த மனிதன் சிரித்துக்கொன்டார். நான் அவரின் தொலையியக்கியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். அதை எப்படி எடுக்க முடியும் என்று அப்போது தான் ஒரு திட்டம் தீட்டினேன். நான், "ஏன் உன் கையால் எங்களை கொல்லவில்லை? நாங்கள் உங்களை கொல்லுவோம் என்று பயமோ?" என்று கத்தினேன். இதைக் கேட்டு அந்த மனிதன் தொலையியக்கியைப் பாவித்து சுவர்களை நிற்பாட்டினார். நாங்கள் பயப்படவில்லை. சண்டைப்பிடிக்க தயாரானேம். அந்த மனிதன் பெட்டிக்குள் வந்தார். சண்டைப்பிடிக்கும் போது, எங்களால் அவரை வெல்லமுடியவில்லை. சாமர்த்தியமாக நான் அவரின் தொலையியக்கியை பறித்தேன். நான் அவற்றின் தொலையியக்கியைப் பாவித்து பெட்டியை நிலத்திற்கு கொண்டுவந்து, பெட்டியை திறதேன். நானும் சாமியும் கெதியாக பெட்டியிலிருந்து தப்பித்து, பெட்டியை மூடினேன். உள்ளே அந்த மனிதன் மாட்டிவிட்டார். அதற்குப் பிறகு மாமி காவல்காரர்களைக் கூப்பிட்டு, அவர்கள் அவரை கொண்டுப்போனார்கள்.

-----------------

# அவுஸ்திரேலியாவில் தமிழும் தமிழர் கலாச்சாரமும்

-கி. லக்சிராம்-

ஒரு இனத்தின் அடையாளம் மொழியாகும். அதனைத் தக்கவைப்பதற்குப் புழக்கத்தில் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும் என மொழி அறிஞர்கள் கருதுகின்றார்கள். இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் மொழி தோற்றம் பெற்றிருந்தாலும், அது இன்றும் நிலைத்திருப்பதற்கு அதன் தனித்துவமே காரணமாகும். தமிழர்கள் புலம்பெயர்ந்து கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, இலண்டன் போன்ற மேலைத்தேய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு, கல்வி, போர்ச் சூழல் போன்ற பல காரணங்களால் சென்றிருக்கிறார்கள். இருப்பினும், "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியாரின் கூற்றுக்கு இணங்க தமிழை வளர்ப்பதில் புலம்பெயர்ந்தவர்கள் பேரார்வம் கொண்டிருக்கிறார்கள். அதே போல் "வாழையடி வாழையாக தமிழர் கலாச்சாரத்தைத் தமது பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்கின்றார்கள். என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

பல்லினக் கலாச்சாரங்கள் கொண்ட அவுஸ்திரேலிய நாட்டில் அரசாங்கம் சமூக மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனால் அந்நிய நாட்டில் தமிழர்கள் பண்டிகைகளைக் கொண்டாடுதல், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை நடத்துதல், தமிழ்ப் பள்ளிகளை இயக்குதல் போன்ற அரிய பணிகளை ஆற்றுகின்றார்கள்.

விழாக்கள் மடிந்துபோன மனத்திற்கு புத்துணர்ச்சியையும், நல்லின்பத்தையும் தருகின்றன – தமிழர்கள் கடல் கடந்து எங்கு சென்றிருந்தாலும், தமக்குரிய பண்டிகைகளைக் கொண்டாட மறப்பதில்லை. அவுஸ்திரேலியாவில் வேலைப் பழு காரணமாகவும், பொது விடுமுறை தமிழர் பண்டிகைக்கு இல்லாமையாலும் இலங்கை, இந்தியாவில் கொண்டாடுவது போன்று, வீட்டில் சிறப்பாகச் செய்யமுடியாமல் விட்டாலும் அந்தக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தமிழ் அமைப்புகளான கேசித் தமிழ் மன்றம்,

விக்டோரிய தமிழ்க் கலாச்சார மன்றம் போன்றவை தைப்பொங்கல், புத்தாண்டு விழா, ஆடிப்பிறப்பு, தீபாவளி, தமிழ் முதியோர் விழா ஆகியவற்றை முன்னெடுக்கின்றன.

இவ்விழாக்கள் தனித்தனியாக வார இறுதிநாளில் ஒரு பொது இடத்தில் ஒழுங்கு செய்யப் பட்டு பெருந்திரளான தமிழர்கள் ஒன்று கூடி களிக்கின்றார்கள். பெரியவர்களும், சிறியவர்களும் கலாச்சார உடை அணிந்து வருவதுடன் பாரம்பரிய விளையாட்டுக்கயான கபடி, கிளித்தட்டு, பட்டம் விடுதல், கயிறு இழுத்தல் போன்றவற்றில் பங்கு பற்றி மகிழ்கின்றார்கள்.

அவுஸ்திரேலியாவில் இரண்டாம் தலைமுறைப் பிள்ளைகள் அந்நிய மொழியான ஆங்கிலத்தைப் பயின்றாலும் அவர்களுக்குத் தமிழை ஊக்குவிக்க வேண்டும் என்ற சீரிய நோக்குடன் அவுஸ்திரேலிய - இலங்கை தமிழர் பட்டதாரிகள் சங்கமும், ஈழத் தமிழ்ச் சங்கமும் தமிழ்ப் போட்டிகளை நடத்துகின்றன. இதில் பேச்சு, வாய்மொழித் தொடர்பாடல், நாடகம், பாடல், எழுத்து என்பனஅடங்கும். தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் மாநில, தேசிய மட்டங்களில் நடைபெற்று வெற்றியாளர்களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதில் பலர் தொண்டு மனப்பான்மையுடன் சேவையாற்றுகின்றார்கள்.

ஒரு சமூகமாக வாழும் தமிழர்கள் தமிழை வளர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பேருள்ளம் கொண்ட தமிழர்கள் அர்ப்பணிப்புடன் தமிழ் பள்ளிகளைத் தொடங்கியிருக்கின்றார்கள். பெற்றோர் தமது பிள்ளைகள் தாய்மொழியான தமிழைக் கற்க வேண்டும் என்ற அவாவினால் சிறுவர்களை இங்கு அனுப்புகின்றார்கள். தமிழை, எழுதவும், பேசவும், வாசிக்கவும் ஆசிரியர்களின் உதவியுடன் கற்கின்றார்கள். அவுஸ்திரேலியாவில் தமிழ் *VCE*ல் ஒரு அங்கம் வகிப்பது மேலும் ஒரு வரப்பிரசாதமாமும்.

தமிழர்கள் தாய் நாட்டை விட்டுக் குடிபெயர்ந்து வாழ்ந்தாலும் தமது மொழியில் பற்றுக் கொண்டு சமூக உணர்வோடு ''தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்பது போல் தமிழ் பள்ளிகள், ஊக்குவிப்பு போட்டிகள், குடும்பமாக சமூகமாக மரபுவழிப் பண்டிகைகளைக் கொண்டாடுதல் போன்றவற்றில் பிரதிபலன் எதிர்பாராது ஈடுபடுகின்றார்கள்

# "வில் படி திரன் தோள் வீர! நோக்குதி (கம்பராமாயணம்)

. கணேஸ்வரன்

வானர சேனை சேதுசமுத்தில் அணை கட்டி கடல் கடந்த பின் இலங்கை நகர் முற்றுகையிடப் படுகிறது. இராமலக்குமணர் சேனைத்தலைவருடன் சுவேல மலையுச்சியில் நின்று இலங்கை நகரை பார்வையிடுவதை வருணனை செய்யும் படலம் "இலங்கை காண்படலம்'' ஆகும். நகரின் அழகையும் செல்வத்தையும் வர்ணிக்கும் பாடல்கள் இராமன் இலக்குவனை விளித்துப் பேசுவதாக அமைகின்றது. ''வில் படி திரன் தோள் வீர! ''நல் நெறி அறிஞ ''பூசல் விற் குமர போன்ற சொற்கள் சகோதர பாசத்தை வெளிப்படுத்துவன. ஒளிவீசும் மணிமாடங்கள் ஒழுங்குபட அமைந்த தெருக்கள், பொன்பதித்த தலம், அங்கு உலவும் யானைகள் நகரின் வனப்பையும் செல்வத்தையும் வெளிப்படுத்துவன. இக்கருத்துக்கள் விளக்கும் பாடல்கள் நயம் நிறைந்தவை.

யானை இருள் நிறமாயினும், பொன்பதித்த தலத்தை கால் நிகங்களால் கவ்வி, துதிக்கையால் தன்மேல் வீசப்போவது, பொன்மலை போவது போன்ற பாடல் பின் வருமாறு.

''வில் படி திரன் தோள் வீர! நோக்குதி செங்கண் யானை

அல் படி நிறத்தவேனும் ஆடகத்தலத்தை ஆழ

கல் படி வயிரத்திண் கால் நகங்களின் கவ்வி கையால்

பொற் பொடி என்ன வீசி பொமலை என்னப் போவ''

மணிமாடங்களைப் பார் அனுமன் வைத்த தீ இன்னும் வானை எட்டுவது போல் மிளிர்கின்றதே ஒளி வீசும் மணி மாடங்களை வர்ணிக்கும் பாடல் பின் வருமாறு.

''விரிகின்ற கதிர ஆகி ஆகி மிளிர்கின்ற மணிகள் வீச

சொரிகின்ற சுடரின் சும்மை விசும்புற தொடரும் தோற்றம்

அரிவென்ற வெற்றி ஆற்றல் மாருதி அமைந்த தீயால்

எரிகின்ற தாயே காண், இக் கொடி நகர் இருந்து இன்னும்''

நமது அயோத்தி முதலாக அழகிய நகரங்களை வர்ணிக்கும் சிறந்த புலவர்கள் உயர்ந்த உவமையாக இந்திரன் இருக்கையை உவமிக்கின்றனர். இலங்கை நகரை எடுத்துக் காட்டார். அவர்கள் இலங்கையின் வேறான தரத்தை உணரவில்லை.

''நம் திரு நகரே ஆதி வேறு உன நகர்கட்கு எல்லாம்

வந்த பேர் உவமை கூறி வழுத்துவான் அமைந்த காலை

இந்திரன் இருக்கை என்பர், இலங்கையை எடுத்துக்காட்ட

அந்தரம் உணர்தல் தோற்றார். அருங்கவி புலவர் அம்மா''


இலங்கை காண் படலத்தில் உள்ள இருபத்திமூன்று பாடல்கள் நயம் நிறந்தவை, சகோதர பாசத்தை வெளிப்படுத்துவன. சீதையை அடையும் காலம் கிட்டியது என்ற மனநிலையில் உள்ள இராமனை கவிஞர் பாடும் போது.

''அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள் என்று

பொருந்திய காதல் தூண்ட பொன் நகர் காண்பாள் போல நின்றான் ''

என வர்ணிக்கின்றார்.

------------------




# அன்புள்ள நண்பருக்கு...!!!

சென்ற கிழமை நாம், இங்கே பொங்கல் தினத்தை கொண்டாடினோம்.

நாம் 14ஆம் திகதி தை மாதம், பொங்கல் தினத்தை கொண்டாடினோம். அதி காலையில் எழும்பி, ஏழு மணிக்கு பொங்கலுக்கு ஆயத்த படுத்தி, பொங்க தொடங்கினோம். பொங்கல் தினத்தன்று பள்ளிக்கூடம் இல்லை. எங்கள் பெற்றுறோருக்கு வேலை இல்லை. சூரியன் உதிக்கும் போது,

அவுஸ்திரேலியாவில் எல்லா தமிழ் மக்களும் காலையில் எழும்பி, குளித்து இருப்பார். எங்களுடைய அம்மா வாசலில் கோலம் போடுவார்.

நாங்கள் எல்லோரும் எங்களுடைய பெற்றோருக்கு உதவி செய்வோம். அப்பா கரும்பு எடுத்து கட்டுவார். பின் பானையில் பொங்குவோம். பொங்கும் போது பானையில் தண்ணீரும், பாலும் விட்டு அப்பா அடுப்பில் பானையை தூக்கிவைத்தார். பால் பானையில் இருந்து பொங்கி வரும் போது. அப்பா அரசியை இரண்டு கையால் பானையில் போட்டார்.

சிறிது நேரத்தில் பால், சக்கரை, முந்திரிகை வற்றல் சேர்த்து பானையில் போட்டு அம்மா கிளறினார். பின் பழத்தையும், பொங்கலையும், தலைவாழையிலையில் எடுத்து வைத்து, சூரியனுக்கு படைத்தோம். அதற்கு பிறகு நாங்கள் எல்லோரும் தலைவாழையிலையில் பொங்கலை உண்டோம்.

அதின் பிறகு நாங்கள் கோயிலுக்கு போய் வந்தோம். மாமா, மாமி, அம்மாம்மா, தாத்தா, சித்தப்பா, சித்திக்கும் எல்லோருக்கும் பொங்கலை கொண்டு சென்று கொடுத்தோம்.

நீங்கள் உங்களுடைய வீட்டில் பொங்கல் கொண்டாடினீர்களா???

அன்புள்ள நண்பி – விதுஜா –

## அன்னை

*அன்பினில் நிறைந்தவள் என் – அன்னை*

*அரவணைப்பில் சிறந்தவள் என் அன்னை*

*அகிலம் போற்றும் என் அன்னை – உன்*

*அன்பினால் வாழுது அவ் உலகம் – அன்னையே*

*உயிரைக் கொடுத்து பெற்ற எம் அன்னை*

*உதிரத்தையே பாலாக்கி வளர்த்தவள் - எம் அன்னை*

*உணவு இன்றி உறக்கம் இன்றி – எம்மை*

*ஊட்டி வளர்ப்பாள் பத்திரமாய்*

*பூமிதன்னில் வந்துதித்த பூமகள் – எம் அன்னை*

*பூமின்றி ஏழு உலகிலும் உள்ளவள் – எம்*

*அன்னை அன்னையின்றி இவ் உலகில் ஓர்*

*உயிரும் இல்லையே.*

*-வினித் கணேசன் - பாரதி பள்ளி -*



## இயந்திரம்

*- கீர்த்திகன் சீவராஜா -*

*இன்றைய காலத்தில் மனிதன் விண்கலத்தில் பறப்பது ஒரு சாதாரண விடயம். ஆயிரக்கணக்கான வருடங்களில் செய்த அறிவு வளர்ச்சியாலதான் இப்படியான முன்னேற்றங்கள் நடந்திருக்கிறது. ஆனால் இது எப்படி செய்தார்கள் என்ற கேள்வி எல்லோருக்கும் இருக்கும்.*

*பல ஆயிர வருடங்களுக்கு முன் ஆதிகால மனிதன் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு போவதற்கு ஒரே ஒரு வழி தன் கால் நடையே. பொருட்களை கொண்டு போக நினைத்த நேரம் எல்லாம் மிருகங்களுக்கு மேல் பொருட்களை வைத்துப்போவார்கள். மனிதர்கள் மிருகங்களை கூடிய அளவாக பாவித்தார்கள். குதிரைகள் யானைகள் மாடுகள் கழுதைகள் போன்ற மிருகங்கள் அந்த நேரத்தில் நிறைய பேர் இதற்காக பாவித்தார்கள். குதிரைகள் மனிதர்களை விட மிக வேகமாக நகரும்திறன் இருந்ததால் அதிகமான மனிதர்கள் குதிரைகளை பாவித்தார்கள். அது மட்டுமல்ல யானை போன்ற மிருகங்களை வைத்து பாரமான பொருட்களை சுமந்து செல்ல பாவித்தான்.*

*அதற்கு பிறகு முதல் முறையாக மனிதர்கள் மரங்களின் உதவியுடன் சக்கரத்தை உருவாக்கினார்கள். இந்த கண்டுப்பிடிப்பால் நிறைய மோட்டார் இல்லாமல் இருக்கும் வாகனங்கள் அமைப்பதற்கு இலகுவாக இருந்தது. மிருகங்கள் இழுக்கக்கூடிய ஒருவண்டியை அமைத்து வந்தார்கள். மாடுகள் கழுதைகள் குதிரைகளை இந்த வண்டிகள் இழுப்பதற்கு உபயோகித்தான். விவசாயத்திற்காகவும் வியாபாரத்திற்க்காகவும் இந்த வண்டிகளை உபயோகித்தான்.*

*காலப்போக்கில் மனிதன் சிறிய தூரப் பயணங்களை இலகுவாக்க துவிச்சக்கரவண்டியை உருவாக்கினான். இதனால் நிறைய மனிதர்கள் பயணம் செய்வதற்கு எளிதாக இருந்தது. சிலர் வியாபாரிகள் செய்வதற்கு துவிச்சக்கரவண்டியை பயன்படுத்தினார்கள். அது மட்டுமல்ல பொதுவான மக்கள் துவிச்சக்கரவண்டியில் வேலைக்கு அல்லது பாடசாலைக்குப் போவதற்கும் பயன்படுத்தினார்கள்.*

*இப்படியாக மனிதன் தனது பயணத்தை வேகமாக்குவதற்கு மிக நீண்டதூரத்திற்க்கு*

போவதற்குரிய சிந்தனையோடு இயந்திரத்தை கண்டுபிடித்து மோட்டார் வண்டிகளை உருவாக்கினான். அதே நேரம் பெருமளவில் பொது மக்கள் பயணம்செய்வதற்காக மோட்டாரை பாவித்து தொடரூர்ந்து மற்றும் பேரூந்து அமைக்கப்பட்டது. இந்த கண்டுப்பிடிப்புகளால் நிறைய பேர் ஒரே நேரத்தில் ஒரே இடத்திற்கு போவதற்கு வசதியாக இருந்தது. அதனுடன் மக்கள் தனியே பயணம் செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்று நினைத்து மகிழூர்ந்தை உருவாக்கினான்.

அது மட்டுமல்லாமல் இடம் விட்டு இடம் நீர் மூலமாக போவதற்கு கட்டு மர கப்பல்களை உருவாக்கினார். பின்பு சிறிய படகுகளிலிருந்து பெரிய பாய்மர கப்பல் வரை அமைத்தார்கள். மோட்டார் கண்டுபிடித்த பின் நிலக்கரியை பாவித்து மிக பெரியகப்பல்கள் உருவாக்கப்பட்டது. இதைப் தொடர்ந்து நிலக்கரி பாவனையை நிறுத்தி நிலக்கீழ் எண்ணையை பாவிக்க தொடங்கினார்கள். இதனால் பெரும் அளவில் மக்கள் நாடு விட்டு நாடு பயணம் செய்வதற்கு இலகுவாக இருந்தது. அது மட்டுமல்ல ஒரு நாட்டில் இருக்கும் பொருட்களை வேறொரு நாட்டுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு கப்பலை பாவித்தார்கள்.

அதன் பின் நாடு விட்டு நாடு வேகமாக செல்வதற்காக விமானங்கள் உருவாக்கப்பட்டது. இதனால் மக்கள் உடனடியாக கண்டம் விட்டு கண்டம் விமான மூலமாக எளிதாக செல்வதற்கு விமானத்தை கண்டுப்பிடித்தார்கள்.

அத்துடன் நின்று விடாமல் கண்டம் விட்டு கண்டம் சென்ற மனிதன் அண்டம் விட்டு அண்டம் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு விண்கலத்தை உருவாக்கினான். ஏற்கனவே மனிதன் இதன் மூலமாக முதலில் சந்திரனில் காலடி எடுத்து வைத்தான். இன்றைய கால கட்டத்தில் மேலும் அவனின் சிந்தனை விண்வெளியை நோக்கி சென்றுக்கொண்டிருக்கிறது. இந்த சிந்தனையின் விளைவாக விண்கலங்களை செவ்வாய் போன்ற கிரகங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறான்.

இப்பொழுது எல்லா வாகனங்களும் வாகன எரிபொருளை பாவித்துதான் நகரும். ஆனால் இப்படியான வாகனங்கள் பாவனையால் அதிலிருந்து வெளிவரும் புகை சுத்தமான காற்றை அசுத்தமாக ஆக்குகிறது. இது எமது சூழலை மாசடையைச்செய்கிறது. இதனால் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து புதிய வழிகளில் பாவிக்கக்கூடிய சக்திகளை கண்டுபிடித்து அதன் மூலமாக தனது போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றி கொண்டிருக்கிறான்.

மனிதனின் பயணத்தை இன்னும் இலகுவாகவும் வேகமாகவும் ஆக்குவதற்கு அவனது அறிவு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பல புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து தானாக இயங்கும் வாகனங்களை உருவாக்கி தனது போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான்.

மனிதனின் அறிவுவளர்ச்சி வளர்ந்து கொண்டு இருப்பதால் எதிர்காலத்தில் அவனுடைய திறமையினால் போக்குவரத்துக்காக புதிய புதிய கண்டுப்பிடிப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

## எனது கல்விச் சுற்றுலா.

எனக்குப் பிடித்த பாடசாலை சுற்றுலா மெல்போன் அருங்காட்சியகம். இந்த கல்வி சுற்றுலாவில் நானும் எனது நண்பர்களும் அருங்காட்சியகத்தின் வரலாறு பற்றி கற்றோம். இது முடிந்து IMAX அரங்கத்திற்குச் சென்றோம். இங்கு நாங்கள் ஒரு எகிப்தியப் படம் பார்த்தோம்.

முதலில் நாங்கல் அருங்காட்சியகத்தில் அவுஸ்திரேலியாவின் வரலாறு பற்றிப் படித்தோம். இதில் நாங்கள் பூர்வீக குடிகள் பற்றிப் படித்தோம். சிற்றுண்டிகள் சாப்பிட்டு எல்லா வகையான கண்காட்சிகளையும் பார்த்தோம். எனக்குப் பிடித்தது மழைக்காடாகும். இந்த காட்சியகத்தில் நிறைய பூச்சிகள் மற்றும் எட்டுக்கால் பூச்சி இருந்தது.

இது முடிந்து எல்லோரும் IMAX அரங்கத்திற்குச் சென்றோம். இங்கு படம் பார்த்தோம். இந்தப் படம் எனக்கு பிடித்தது. இந்த கல்விச்சுற்றுலாவில் நாம் நிறையக் கற்றோம்.

## ஊக்கம்

விதுஷ் விஜயகுமார்

***மகன் விமானத்தில் இருந்து இறங்குகிறார், அப்பா அவரை பார்க்க காத்திருக்கின்றார்***

*அப்பா "ஆகா மகன்! எப்படி இருக்கின்றீர்? உங்கள் முதல் நாள் விமான பயிற்சி எப்படி இருந்தது?"*

*மகன்-"நான் நன்றாக மற்றும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். வகுப்பில் விமான ஆசிரியர் என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லும் போது, கொஞ்சம் குழப்பமாக இருந்தது. ஆனால், விமானத்தில் ஏறினேன் பின்பு எனக்கு எல்லாம் இலகுவாக இருந்தது. என்னுடைய ஆசிரியர் நான் விமானம் ஓடுவதைப் பார்த்து கேட்டார், "உங்களுக்கு விமானம் முதலே ஓட தெரியுமா?". நான் சிரித்துக் கொண்டே சொன்னேன், "இன்று தான் நான் முதல் முறையாக விமானத்தில் இருக்கின்றேன்."*

*அப்பா-"கா கா கா! உங்கள் முதல் பயிற்சி வகுப்பு நன்றாக போய் விட்டது."*

*மகன்-"எதற்காக நீர் விமானம் ஓடுவதற்கு பழகுகிறீர் என்று என்னிடம் கேட்டார். நான் ஒரு விமான ஓட்டியாக வர ஆசைப்படுகிறேன். ஏன் என்றால் நான் பல நாடுகளுக்கு செல்லலாம், புதிய நண்பர்கள் உருவாகும் மற்றும் புதிய கலாச்சாரங்களை அறிந்து கொள்ளலாம்" என்று பதில் சொன்னேன். அவர் சொன்னார் இது நல்ல கனவு என்று, ஆனால் நான் விமானி ஆகவில்லை என்றால் என்ன செய்வது என்று கோட்டார். நான் தெரியவில்லை என்று கூறினேன். ஆகாய ஆய்வு வேலைகள் உள்ளன, வேலையில் சம்பளம் மற்ற பொது வேலைகளை விட கூடுதலானது என்றார்."*

*அப்பா- "ஆ.... அப்படியா ? ! அதுவும் நல்லது தானே இரண்டு வேலைகளும் செய்யலாம்."*

*மகன்- "கா கா! ஆம் ஆம் செய்யலாம்." மிகுதி தொடரட்டும் பார்ப்போம்.*

*அப்பா- " சரி வா, வீட்டை செல்வோம்."*

*மகள்- " சரி வாங்கோ "*

## கேசி தமிழ் மன்றம்!!

*கேசி தமிழ் மன்றம் - தருமே*

*கேடில் நிறை செல்வம்*

*நாடி வந்த மழலையர்க்கு*

*நல்ல தமிழ் தருமே - பாலர்*

*கூடி ஆடி மகிழ்ந்து*

*குதூகலிப்போம் வாரீர்!!*

*அழகான மெல்பேணில்*

*அன்னை தமிழ் இனிக்குது*

*வளமான இந் நாட்டில் எம்*

*பழந் தமிழ் கலைகள் கூட மிளிருது*

*மழலைகள் அனைவருக்கும் - தமிழ் பேச*

*மகிழ்ச்சி வந்து பொங்குது*

*வளமான ஆஸி தீவில் தமிழருக்கு*

*வரமாக இருக்குதே - வலிகளெல்லாம் மறக்குதே*

*நாட்டம் கொண்டு நாமுமே*

*நல்ல தமிழ் படிப்போமே*

*வீட்டில் எங்கள் மொழியினை*

*விருப்புடன் பேசி மகிழ்வோமே*

*ரோட்டில் பல இனத்தவரை பார்த்தாலும்*

*ரொம்ப மகிழ்ச்சி இல்லையே - எம் கேசி தமிழ்*

*காட்டும் பாதை இனிமையே*

*களிப்புடனே வரவேற்போமே!*

*சக்கடத்தார்*

## தமிழே என் தாய்மொழியே!

*வசனமாய், கதையாய், நான் வாசிக்கும்
மொழியே! என் தமிழ்மொழியே!*

*கேள்வியாய், பதிலாய், நான் பேசும் மொழியே!
என் தமிழ்மொழியே!*

*கவிதையாய், பாட்டாய், நான் கேட்கும் கீதமே!
என் தமிழ்மொழியே!*

*என்னோடு வாழும், வளரும், என் பெருமை என்
தமிழ்மொழியே!*

*தமிழே என் தாய்மொழியே!*

*வள்ளுவர் தந்த திருக்குறளின் மொழியே! என்
தமிழ்மொழியே!*

*ஔவையார் அளித்த ஆத்திசூடியின் மொழியே!
என் தமிழ்மொழியே!*

*கம்பர் கவியில் ராமாயணம் ஆகிய அன்பு
மொழியே! என் தமிழ்மொழியே!*

*இளங்கோ எழுதிய சிலப்பதிகாரத்தின்
மொழியே! என் தமிழ்மொழியே!*

*தமிழே என் தாய்மொழியே!*

*நடனத்தில் கலந்து ஆடும் மொழியே! என் அன்பு
தமிழ்மொழியே!*

*நான் காற்றோடு சுவாசிக்கும் தாய்மொழியே!
என் அன்பு தமிழ்மொழியே!*

*நற்பாட்டாய் நாமீது தவழ்ந்தோடும் தாயே! என்
அன்பு தமிழ்மொழியே!*

*நான் வாழ நற்பண்பு தந்தாயே! என் அன்பு
தமிழ்மொழியே!*

*தமிழே என் தாய்மொழியே!*

*பல்லாண்டின் முன்னே உருவான முதல்
மொழியே! என் தமிழ்மொழியே!*

*இருட்டில் வழிகாட்டும் ஓர் இனிதான ஒளியே
என் தமிழ்மொழியே!*

*முதல்முதலாய் நான் கேட்ட முத்தமிழே! என்
முதுமொழியே தமிழ்மொழியே!*

*விதம்விதமாய் கலையாகி மேன்மை
மொழியானாய் என் கரும்பான தமிழ்மொழியே!*

*-சுவேத்தா தர்மசீலன்-*

## செல்லப் பிராணி உஞ்சு

*-V.S. கணநாதன் -*

*ஆண்கள் வழக்கம் போல் அன்றாட பிழைப்புக்குச் செல்லும் வேளை. தினமும் போல் அன்று அதிகாலையில் பெண்கள் துயில் எழுந்து, அவரவர் வீட்டு வாசலுக்குத் தண்ணீர் தெளித்து, முற்றம் பெருக்கிக் கோலம் போட்டு வீட்டு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.*

*சூரியன் இன்னும் கிழக்கில் உதிக்கவில்லை. ஓர் இளம் பெண் காதலன் வருகைக்காக ஆவலுடன் முகம் சிவக்க நிற்பது போல் வானம் செக்கச்செவேர் என்று இருந்தது*

*அடுத்த வினாடி. பெரும் இடி முழங்கியது போல் குண்டு வெடித்தது. பெரும் சத்தம் கேட்டு அந்தக் கிராமத்தவர் அனைவரும் நடுநடுங்கிப் போனார்கள். தத்தம் வேலைகளை அப்படியே போட்டு விட்டு, குண்டு வெடித்த திசை நோக்கி நின்றனர் ஊர்ஜனம். செவ்வானம் இப்போ கார்மேகம் போல் கறுத்தது. மீண்டும் மீண்டும் வெடிச்சத்தம் காதுகளைத் துளைக்க , 'ஐயோ குய்யோ!' என்று அலறியபடி குழந்தை குட்டிகளை வாரித்தூக்கி, அவர்கள் ஓடிச்சென்று பதுங்கு குழிகளில் அடைக்கலம் புகுந்தனர்.*

*புரிந்து விட்டது. இது வான் படையின் அதிரடித் தாக்குதல் என்று புரிந்து விட்டது. அடுத்து, ஆர்மி வரும். அவர்கள் கதி அவ்வளவு தான் சிலர் வாயைப்பொத்தி ஒப்பாரி வைத்தனர். இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் பலியானார்கள் என்று ஒருவருக்கும் அப்போ யூகிக்க முடியவில்லை.*

*நான்கு வயதுச் சிறுவன் சேந்தன் ஏதோ கெட்ட கனா கண்டமாதிரி 'வீர்' என்று கத்தியபடி படுக்கை விட்டுத் துள்ளி எழுந்தான். வீட்டு வாசலில் தூங்கிக்கொண்டிருந்த நாய்க்குட்டியும் பட்டாசுச் சத்தம் என்று நினைத்துப் பயந்து போய் இங்கும் அங்கும் ஓடி, ஒரு மறைவிடத்தில் பதுங்கியது.*

*சேந்தன், 'அம்மா! அம்மா!!'வென்று அலறினான். அம்மாவைக் காணவில்லை. வெளிப்புறம் ஓடினான். எங்கும் நெருப்புப் பத்தி எரிவதைக்கண்டு பதறிப் போனான். தன் தாயைத் தேடிச் சுற்று முற்றும் பார்த்தான். அப்போது இருவர் அவன் தாயைத் தூக்கி ஒரு ஆட்டோ வண்டியில் ஏற்றுவதைக் கண்டவன் "அம்மா!" என்று தொண்டை கிளியக்கத்தினான்.*

*ஒருவராவது அவன் அழுகையைக் கவனியாது தத்தமக்கு நேர்ந்த அநியாயயம் நினைத்து கதற, சேந்தன் வேகமாய்ச் சென்ற வண்டியின் பின்னாடி ஓடினான். ஓட்டமும் அழுகையுமாய் ஓடிக்கொண்டிருந்த சேந்தனை, உஞ்சு தன் மறைவிடமிருந்து கண்டது. சேந்தனும்*

தன்னைப்போல் பயத்தில் ஓடுறான் என்றெண்ணி, அது தன் பயத்தை ஒதுக்கிவைத்து, நண்பனுக்குத் துணை புரிய அவனருகில் பாய்ந்தோடியது.

சேந்தனோ தன் செல்லப்பிராணியைக் கவனியாது வண்டி சென்ற திசையில் அழுதுகொண்டு ஓடினான். எவ்வளவு தூரம் ஓடினானோ தெரியவில்லை. தெருவெல்லாம் வெறிச்சோடிக் கிடந்ததைக் கண்டு பயம் கவ்விக்கொள்ள அவனுக்கு மயக்கம் ஏற்பட்டது.

அப்ப உஞ்சு அவனைச் சுத்தி வந்து தன் நாவினால் அவன் கைகளை நக்கியது. சிறுவனுக்கு ஒரு இனம் புரியாத தெம்பு ஏற்பட்டது. தன் வாயில்லா நண்பனைக் கட்டி அணைத்தான். உஞ்சு தன் வாலை ஆட்டிக் கண்ணால் சிரித்து நானும் உன் கூடவே வாறன், பயம் வேண்டாம் என்று தைரியம் ஊட்டியது போல் அவனுக்குத் தோன்றியது.

பாவம் உஞ்சு, வாலாட்டலை நிறுத்தி, பின்னங் கால்களை மடக்கி நிமிர்ந்து உட்கார்ந்திருந்தது. சில நிமிடங்களுக்குப் பின்னர் புத்துயிர் கிட்டிய மாதிரித் தென்பட மீண்டும் ஓடத்துவங்கினான் சேந்தன்.

இருவரும் ஆட்டோ சென்று மறைந்த திசையை நோக்கி ஓடினர். ஆனால் அந்தப் பாலனுக்கு அதே மாதிரி எத்தனை ஆட்டோக்கள் வீதியில் விரைந்து சென்றன என்று தெரிய வாய்ப்பில்லை. வெய்யிலும் அதிகமாகிவிட்டது. அத்துடன் குழந்தைக்குப் பசியோடு தாகம் ஏற்பட, ஒரு மரநிழலில் நின்று செய்வதறியாது கண்களை மூடினான்.

அந்தப் பிஞ்சுள்ளம் தவித்தது. அழ ஆரம்பித்தான்.மீண்டும் ஓடினான். சிறிது நேரத்தில் அவன் பிஞ்சுக் கால்கள் சோர்ந்து விட்டன. அடுத்த வினாடி ஒரு வீட்டுப் படலையருகே மயங்கி விழுந்தான்.

உஞ்சுக்கு அவன் நிலையைப் பார்க்கச் சகிக்கவில்லை. அங்கு இங்குமாக ஓடிய நாய், அந்த வீட்டின் இரும்புப் படலையைத் தள்ளியபடி உள்ளே சென்று முன் கதவைத் தன் கால்களால் விறாண்டி பெரிய சத்தமாகக் குரைத்தது.

ஒரு பெரியவர் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். நாய் ஒன்று படலைப் பக்கம் பாய்ந்துபோய் தன்னைத் திரும்பிப் பார்த்தத்தைக் கண்டவர், ‘தெரு நாயெல்லாம் வீட்டுக்கு வர ஆரம்பிச்சுட்டுது,’ என்று கோபத்துடன் முணுமுணுத்த வண்ணம் நாயைக் கலைக்க வெளியே வந்தார்.

சிறு பையன் ஒருவன் படலை அருகே மயங்கிக் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். "இதென்னடா கொடுமை," என்று சொல்லி அவனைக் கூர்ந்து பார்த்தார். நாயும் அவன் பக்கத்தில் போய் நின்றது. அவர் அதைக் கலைத்தும் அது கொஞ்சமும் நகரவில்லை.

“யார் குழந்தையோ? காலம் கெட்ட காலத்தில் இங்கே கிடக்கிது,” என்று சொல்லிக் குழந்தையைத் தூக்கி வீட்டுள்ளே சென்றார்.

உஞ்சு வாலை ஆட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து இவர்கள் உள்ளே செல்வதைப் பார்த்த வண்ணம் படலை வெளியே நின்றது.

"மரகதம்!" என்று அவர் தன் மனைவியை அழைத்தார்.

அவர் குரலின் ஓசையிலிருந்து அவரின் ஆதங்கத்தைப் புரிந்தவளாய்ச் சேலைத்தலைப்பால் நெத்தியைத் துடைத்த வண்ணம் அடுக்களையில் இருந்து வெளியே விரைந்து வந்தாள்.

அவளைப் பின் தொடர்ந்து மருமகள் தமயந்தியும் அங்கே வந்தாள். மாமனார் ஒரு குழந்தையைத் தூக்கியபடி, அவசரமாக உள்ளே நுழைந்ததைக் கண்டவள் இந்தப்பையன் யார் என்று தெரிய ஆவலுற்றாள்.

"இவன் தெருவாசலில் அறிவின்றி விழுந்து கிடந்தான். யார் பெத்த பிள்ளையோ? கொஞ்சம் தண்ணீர் பருக்கு," என்றார்.

தமயந்தி அவனைத் தன் மார்பில் அணைத்தபடி உள்ளே சென்று ஒரு கோப்பை தண்ணீர் குடுக்க அவன் மளமளவென்று அதைக் குடித்து முடித்தான். அவள் மீண்டும் ஒரு கோப்பை தண்ணீர் நீட்ட அதையும் ஒரே மூச்சில் குடித்தான்.

“உஞ்சு! உஞ்சு!!” என்று கத்தினான். அதைக்கேட்ட நாய்க்குட்டி வெளியே இருந்து குரல் கொடுத்தது.

இதனைக் கவனித்த நடராசர், “நாய்க்குட்டிக்கும் தாகம் அதிகமாயிருக்கும்." என்று மருமகளிடம் சொன்னார். அவள் ஒரு பழைய சட்டியில் தண்ணீர் நிரப்பிக் குடுக்க அதைப் படலைக்கு வெளியே நின்ற நாய்க்குட்டிக்குக் குடுத்தார்.

அது நக்கிக்குடித்தபின் தன் வாலையாட்டி அவரைப் பார்த்து நன்றியைத் தெரிவித்த மாதிரி அவருக்குத் தோன்றியது. அவர் படலையைத் திறந்து நாயை வெளி முத்தத்தில் விட்டார். பிறகு மனைவியிடம், "அதுக்குக் கொஞ்சம் பழஞ்சோறு வை," என்றார்.

தமயந்தி தன் சேலைத் தலைப்பை நனைத்து பிள்ளையின் முகத்தை நன்றாகத் துடைத்தாள். தண்ணீர் விடாய் தீர்ந்ததும் அவன் தரையில் படுத்து உறங்கினான்.

*அவன் தூங்கி எழுந்தவுடன் அவள் அவனுக்குச் சாதத்தில் மோரைப் பிசைந்து தீத்தினாள். உண்டகளை தீர்ந்ததும், தாயின் நினைவு அவனை வருத்த, அவன் "அம்மா! அம்மா!!" என்று தொண்டை கிழியக் கத்தினான்.*

*அக்கணமே தமயந்திக்கு அவன் மீது ஒரு பாச உணர்ச்சி உண்டாயிற்று. சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அவளின் ஒரே மகனுக்கு நெருப்புக் காச்சல் வந்து மருத்துவர்களால் அவனைக் காப்பாத்த முடியவில்லை. அதன் பிறகு அந்த இளந்தம்பதிக்குக் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை. தமயந்தியின் கணவன் சங்கரன் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தான். சம்பள உயர்வு கொடுக்காமல் ஊழியரிடம் நிறைய வேலை வாங்குவான் அவன் முதலாளி. லீவு நாட்களில் ஊருக்கு வருவான் சங்கரன்.*

*இந்தக் குழந்தையைக் கண்டதும் சோகத்தில் இதுவரை தவித்துக்கொண்டிருந்தவளுக்குத் தன் குழந்தை தன்னிடம் திரும்பிவந்தது போன்ற ஒரு இனம்புரியாத உள்ளுணர்ச்சி எழுந்தது.*

*தமயந்தி அன்று பூராவும் தன் கவனத்தைக் குழந்தைமேல் அன்புடன் பொழிந்தாள். அவனுக்குக் கோப்பையில் பாலூட்டி, அவனைக் குளிக்கவாத்துத் தலையைத் துவட்டினாள். உள்ளே கூட்டி வந்து ஒரு சால்வைத் துண்டை இரண்டாய் மடித்து அந்தக் குழந்தையின் அரையில் கட்டி அழகு பார்த்தாள். பிறகு அவன் உடுத்திருந்த அழுக்குச் சட்டையைக் கழுவிக் காயப்போட்டாள்.*

*பையனோ, "அம்மா அம்மா!" என்று அப்பப்ப கதறி அழுதான். வெளியே நின்ற நாய் தன் வாலை ஆட்டி அன்புக்குரல் கொடுக்க அவன் வெளியே ஓடப்பார்த்தான். ஆனால் முன் கதவு பூட்டி இருப்பதைக் கண்டு திரும்பவும் கதறி அழுதான். தமயந்தி என்ன செய்வதென்று அறியாது கவலையுற்றாள்.*

*அடுத்தநாட் காலை, நடராசர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, ஒரு போத்தல் தண்ணியுடன் வெளியே கிளம்ப ஆயத்தமானார். "ஊர் பேர் தெரியாத குழந்தையை எவ்வளவு காலம் எங்களுடன் வைத்திருக்கலாம். இந்தக் குழந்தைக்குப் பெற்றோர் ஆதரவு தேவை. இவனை யார் கொண்டுவந்து எங்கள் வாசல்லே போட்டாங்களோ தெரியாது. வாசல்லே போட்டவனே வந்து எங்களுக்குப் பிரச்சனை குடுக்கலாம். நான் இரக்கப்பட்டுத்தான் குழந்தையைத் தூக்கி உள்ளே வந்தேன். இதையே விஷமிகள் பயன் படுத்தி எங்களிடம் பணம் கறக்கப் பார்ப்பார்கள்," என்றார்.*

*இவர் பேச்சைக் கேட்ட தமயந்தி மனம் உடைந்து போனாள். "இன்று வேண்டாம், மாமா. இரண்டு மூன்று நாட்கள் இவனை நாங்கள் வைத்துக் காப்பாத்துவோம்" என்றாள் அந்தப் பேதை.*

*அவள் வேதனையை நன்கறிந்த மாமனார், பையனைக் கெதியில் பெற்றோரிடம் சேர்ப்பதுதான் முறை என்று உணர்ந்தார். "நீ வீணாய் அவன் மேல் அதிக பாசம் வைக்காதே. அவன் ஓர் விளையாட்டு பொம்மை அல்ல. நீ பிள்ளைப்பாசத்தால் ஏங்கிறாய், அவனோ தாய்ப்பாசத்தால் துடிதுடிக்கிறான்."*

*அவர் சொல்வதில் உள்ள நியாயத்தை உணர்ந்தவளாய் முகத்தை மூடிக்கொண்டு அறை உள்ளே ஓடினாள்.*

*தன் மனைவியை அழைத்து, "நான் பிள்ளையுடன் வெளியே சென்று, பக்கத்து ஆஸ்பத்திரில விசாரிச்சு, தேவை எண்டால் சாவகச்சேரி பெரியாஸ்பத்திரிக்கும் போய்ப் பார்க்கிறேன்," என்றார்.*

*"நீங்கள் அங்கே இங்கே என்று வெய்யிலில் திரிய வேண்டாம். காலம் கெட்டுப்போச்சு. எங்கே என்ன நடக்கும் என்று தெரியாது. செலவைப் பார்க்காமே நீங்கள் ஒரு ஆட்டோ பிடிச்சுப் போங்கோ."*

*"மரகதம், நீ சொல்வது சரிதான்," என்று சொல்லி, பிள்ளையைத் தூக்கிக்கொண்டு ஆட்டோ பிடிக்க விரைந்தார். அவருடன் சேந்தன் செல்வதைக் கண்ட உஞ்சு உடனே அவர்களைப் பின்தொடர்ந்தது. இதை உணர்ந்த நடராசர், ஆட்டோவில் ஏறாமல், இருவரையும் நடக்கவிட்டு அவர்கள்பின் நடந்தார். கொஞ்ச தூரம் சென்றபின் அவருக்குக் களைப்பு ஏற்பட ஓர் மரக் குத்திமேல் பையனை மடியில் வைத்து அமர்ந்தார்.*

*நாய்க்குட்டி முன்னுக்கு ஓடுவதும் திரும்பி வருவதுமாக இருப்பதைக் கவனித்தவர், ஒரு முடல் தண்ணீர் குடித்து, திரும்பவும் அதுக்குப் பிறகு குழந்தையுடன் நடக்கத் துடங்கினார்.*

*இப்போ வீதியெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தது. ஒரே மயான அமைதி நிலவியது. பக்கத்துப் பள்ளிக்கூடத்தில் இருந்து ஒரே அழுகையும் கூக்குரலும் கேட்க அங்கே சேந்தனுடன் சென்றார்.*

*வாத்தியார் ஒருவர், "எங்கள் பள்ளிக்கூடத்தை பெண்கள் அகதி முகாமாக அமைத்திருக்கிறோம்," என்று நடராசருக்குத் தெரிவித்தார்.*

*"நேற்று ஆர்மிக்காரன் செய்த அட்டூழியங்களால், தம் சொந்தங்களையும் இருப்பிடங்களையும் தொலைத்துவிட்டு இவர்கள் கதியற்று நடுத்தெருவில் அகதிகளாய் நின்றார்கள். நாங்கள் அவர்களை இங்கே கூட்டி வந்தோம்," என்றார் தலைமை ஆசிரியை. "சிறு காயங்களுக்கு தாதிமார் மருந்து போட்டு, பெரிய காயங்களுக்கு ஆஸ்பத்திரி அனுப்பலாம் என்றால் இங்கே அதற்கேற்ற வசதியில்லை," என்றார்.*

நடராசர், அங்கே சிலரிடம் பேசி, "நான்கு வயதுப் பையன் ஒருவனைத் தேடுகிறீர்களா?" என்று நாசூக்காகக் கேட்டார்.

தலை விரி கோலத்துடன் ஒரு மாது, "என் குமரிப்பெண்ணைக் கண்டீர்களா?" என்று வெறி பிடித்தவள் போல் கத்தியபடி அவரை அணுகினாள். அவள் பரிதாப நிலை கண்டு கண் கலங்கினார் அவர். அவளுக்குக் கொஞ்சம் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி மீண்டும் தேடுகிற பணியை மேற்கொண்டார்.

கடைசியில் ஒரு நடுத்தர வயது அம்மா அவரிடம் வந்து, "நான்கு வயதுப் பையனை நினைத்து அலறிய பெண் ஒன்றை ஆபத்தான நிலையில் சாவகச்சேரி பெரிய ஆஸ்பத்திரிக்கு நேற்று மதியம் தூக்கிச் சென்றனர் அம்பூலன்சில். அவள் பெயர் கண்மணி," என்றார். "தன் கணவன் முருகன் என்ன ஆனானோ என்றும் அவள் வருத்தப்பட்டாள். தன் குழந்தை சேந்தனுக்குத் தன் செல்லப்பிராணி உஞ்சு மேல் அளவு கடந்த பாசம்," என்ற மேலதிக விபரங்களையும் அந்தப் பெண்மணி குடுத்தார்.

இப்போ அவருக்குப் பையன் தாய் பெயர் கண்மணி, தகப்பன் முருகன், மகன் சேந்தன், நாய் உஞ்சு, என்ற விபரங்கள் உறுதியாயிற்று. உடனே நடராசர் ஒரு முடிவுக்கு வந்தவராய் பையனையும் நாயையும் திரும்பி தன் வீட்டுக்கு கூட்டிச்சென்றார். மனைவியிடம் அறிந்த விடயத்தைக் கூறிவிட்டு பஸ் நிலையத்துக்கு விரைந்தார்.

நிலையம் சிறிது தூரத்தில் இருந்தது. அங்கே ஒரே ஜன நடமாட்டம். சாவகச்சேரிக்கு பஸ் மணிக்கு ஒருமுறை தான் போகும். அதுவும் செல்லும் தெரு ஒழுங்காயிருந்தால் தான். மினி வேன்கள் ஒன்று இரண்டு காணப்பட்டன. பணத்தைப் பார்க்காமல் மினி வேனில் நடராசர் ஏறினார். சன நெரிசல். பத்துப் பேர் பயணிக்கிற வண்டியில் இருபதுக்கும் மேல் ஏறினார்கள்.

என்ன செய்வது? பயணிகள் வியர்வை நாற்றமும், சிலர் வைத்திருந்த பைகளில் இருந்து தாங்கொணா கருவாட்டு வாடையும் அவர் மூக்கைத் துளைக்க உடனே இறங்கி விடலாம் போல் இருந்தது அவருக்கு. வண்டியை நிறுத்தலாம் என்றால் கண்டக்டர் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான்.

வண்டி கடுகதியில் விரைந்தது. மயங்கினாலும் விழ முடியாது. ஒருவர் ஒருவரைத் தாங்கியபடி, மினி பஸ் சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன் போய் நின்றது. இறங்கும் போது பஸ் கட்டணம் வசூலித்தார்கள்.

களைப்பு மிகுதியால் ஒரு சிறு தேனீர் கடை வாங்கில் உட்கார்ந்தார் நடராசர்.

"ஐயா, டீ," என்று ஓர் பையன் டம்பளரை நீட்டினான். "என்னய்யா இங்கே?"

பையன் தன் ஊர்க்காரன் என்று தெரிந்து கொண்டார். டீயை வாங்கிக் குடித்தபின் தான் வந்த காரியத்தைப் பற்றி அவனிடம் சொன்னார்.

"ஐயா, இங்கே வருபவர்கள் கன நாள் இருப்பதில்லை. கொஞ்சம் பொறுங்கள். அண்ணரட்டே சொல்லிட்டு, நானும் உங்களுடன் வாறன். தேடிப் பார்க்கலாம்."

ஆஸ்பத்திரி சென்றதும் எங்கும் மருந்து மணம், எங்கும் நோயாளிகள். அப்போ, ஒரு டாக்டர் பெரியவரைக் கண்டு புன்னகையுடன் அவரிடம் விரைந்தார்.

"என்ன டாக்டர் கார்த்திக்? நீங்கள் படிப்பு முடித்து வெளியூர் கிளம்பவில்லையா?" என்று நடராசர் கேட்டார்.

"என் மருத்துவப் படிப்பு முடித்தபின், எங்கள் சமூகத்துக்குத் தொண்டு புரிய வேண்டும் என்று என்னை அர்ப்பணித்துக்கொண்டேன்," என்றார் டாக்டர்.

நடராசர் உடனே அவர் கையை பிடித்து, "டாக்டர், நீங்கள் நல்லாய் இருக்கவேண்டும்," என்று அவரை ஆசீர்வதித்தார்.

பிறகு, அவர் தான் வந்த விடயத்தைப் பற்றி அவரிடம் கூற, டாக்டர் அவரைக் காயம் அடைந்த பெண்கள் பகுதிக்கு கூட்டிச் சென்றார்.

"யார் இங்கே கண்மணி?" என்று டாக்டர் உரத்து அழைத்தார்.

உடம்பு முழுதும் கட்டுப்போட்டிருந்த ஒரு பெண் மெதுவாகக் கண்ணைத் திறந்தாள்.

"உனக்கு கண்மணியைத் தெரியுமா?" என்று டாக்டர் கேட்டார்.

"நான் தான்," என்றாள் அவள்.

"உன் ஊரெங்கே?" என்று நடராசர் கேட்க, "தச்சன் தோப்பு," என்று மிக சிரமத்துடன் கூறினாள்.

"உன் புருஷன் பெயர்?"

"முருகன்."

"எங்கே அவர்?"

"தெரியாது," என்றாள்.

"உனக்குப் பிள்ளைகள் இருக்கா?"

அவள் விக்கி விக்கி அழுதாள்.

*"ஐயா, என்னுடன் கொஞ்சம் வாருங்கள்," என்று அவரை அப்பால் அழைத்துச் சென்றார் டாக்டர் கார்த்திக். "இந்த நோயாளி ஆபத்தான நிலையில் உள்ளாள். அதிர்ச்சி ஏதும் தாங்க மாட்டாள். அவளுக்கு இரத்தம் ஏத்த வேண்டும். ஆனால் அவள் இரத்த group O Negative. அது கிடைப்பது அரிது. இருக்கிற மருந்தை வைத்து நாங்கள் சமாளிக்க வேண்டியிருக்கு, " என்ற தகவல்களைக் கொடுத்தார்.*

*திரும்பி டாக்டர் அவருடன் கண்மணி அருகில் சென்று, "கண்மணி," என்றார்.*

*"உன் மகன் பெயர் சந்திரனா?" என்று கேட்டார் நடராசர்.*

*நோயாளி ஒன்றும் கூறாமல் கண்ணீர் சிந்தினாள்.*

*"உன் மகன் பெயர் பாலனா?" என்று கேட்டார்.*

*அவள் அவரைக் கவனியாது கண்களை மூடிய படியே இருந்தாள்.*

*"உன் மகன் பெயர் சேந்தனா?" என்று அவர் கேட்டதும், உடனே கஷ்டப்பட்டு கண்ணைத் திறந்தவாறு சைகை காட்டினாள். "ஐயா, என் குழந்தை சேந்தன் எங்கே?" என்று அழுதபடி மெல்லிய குரலில் கேட்டாள்.*

*நடராசருக்கு ஒரு பெரிய மனப்பாரம் குறைந்தது போல் இருந்தது.*

*"பயப்படாதே. சேந்தன் எங்கள் வீட்டில்தான் பத்திரமாக. இருக்கிறான்."*

*அவள் உடனே தன் புண்பட்ட கரங்களைத் தூக்கி அவரை வணங்க முயற்சித்தாள்.*

*"அவன் தாயைத் தேடித்தான் இங்கு வந்தேன்," என்றார்.*

*"ஐயா, உங்களுக்குக் கோடி புண்ணியம்," என்றாள் அந்தத் தாய்.*

*"நீ இப்போது இருக்கும் நிலையில், நான் யாரிடம் சேந்தனை ஒப்படைக்கலாம் என்று சொல்."*

*"தகப்பனிடம் தான். ஆனால் அவருக்கு என்ன ஆயிற்றோ? மரக்கறி வியாபாரம் செய்றவர் தச்சன் தோப்பில்."*

*"தேடிப் பார்க்கிறேன். அப்படி ஏதும் தகவல் கிடைக்காட்டில்..."*

*"நீங்கள் அதுவரைக்கும் குழந்தையை உங்கள் பராமரிப்பில் வைப்பீர்களா?" என்று கேட்டாள்.*

*நடராசர் பதில் கூறவில்லை.*

*"ஐயா! மன்றாடிக் கேக்கிறேன் குழந்தையை நீங்கள்தான் வைத்துக் காப்பாத்தவேண்டும். கடவுள் உங்களிடம் தான் என் குழந்தையை சேர்த்திருக்கிறார். இதை நீங்கள் மறுக்க வேண்டாம்."*

*"நீ ஒன்றுக்கும் பயப்படாதே. பையன் என்னிடம் இருப்பான். அவன் தகப்பனை நான் தேடிக்கண்டவுடன் அவரிடம் ஒப்படைக்கிறேன்."*

*டாக்டர் உடனே குறுக்கிட்டு, "இவர் ஊரில் பெரியவர். நல்ல இடத்தேதான் குழந்தை போய் சேர்ந்திருக்கிறான்," என்றார்.*

*"ஐயா, நீங்கள் எங்களை காக்க வந்த தெய்வம். இன்னோர் வேண்டுகோள். எங்க வீட்டு நாய்க்குட்டி சேந்தன் மேல் ..."*

*அவள் சொல்லி முடிக்கமுன், "உஞ்சுவும் எங்கள் வீட்டில் தான் இருக்கிறான்," என்று சொல்லிச் சிரித்தார். "அந்த நாய்க்குட்டிதான் உங்கள் ஊரை காட்டிக் கொடுத்தது எனக்கு."*

*"உங்களுக்கு இரண்டு கோடி புண்ணியம் கிட்டும். உஞ்சுவும் எனக்குப் பிள்ளை மாதிரி," என்றாள்.*

*வீடு திரும்பிய நடராசர் நடந்த சம்பவத்தை மனைவி, மருமகளிடம் விவரித்தார்.*

*சேந்தன் உஞ்சுவோட விளையாடுவதும், அப்பப்ப, "அம்மா!" என்று அலறுவதுமாய் இருந்தான்.*

*அன்று பின்னேரம் தமயந்தி, "சிநேகிதியைப் பார்த்து வாறன்," என்று மாமன் மாமியிடம் விடை பெற்று, வெளியே கிளம்பினாள்.*

*"நேரத்தோடு வந்திடு. காலம் கெட்டுப் போச்சு," என்றார் மாமியார்.*

*தமயந்தி நேரே சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சென்று அன்று வேலை பார்த்துக்கொண்டிருந்த டாக்டரைச் சந்தித்து, "நான் கண்மணிக்கு O Negative ரத்த தானம் கொடுக்க வந்திருக்கிறேன்," என்றாள்.*

*அவர் அவளுக்கு நன்றி கூறி, உடனே அவள் இரத்தத்தை சோதிக்குமாறு மேற்றனுக்கு உத்தரவிட்டார்.*

*அவள் இரத்தம் O Negative தான் என்று நிரூபிச்ச பின்னர், மேற்றன் அவளை உள்ளே அழைத்து, வேண்டிய ஏற்பாடு செய்தபின், தமயந்தி இரத்த தானம் கொடுத்தாள்.*

கண்மணி அடுத்த கட்டில்லே இருந்து அவளுக்கு தன் நன்றியைத் தெரிவித்தாள். "நீ யார் தங்கச்சி?" என்று அவள் கேட்க தகவல் ஒன்றும் தமயந்தி குடுக்கவில்லை. சிரித்த வண்ணம் இருந்தாள்.

இரத்த தானம் முடிய, தமயந்தி களைப்புற்று இருந்ததைப் பார்த்து, மேற்றன் அவளுக்கு ஒரு கப் பாலும் உண்ண உணவும் கொடுத்தார். அதன் பிறகு அவள் தன் வீட்டுக்குக் கிளம்பினாள்.

இப்படி அவள் அடுத்த நாளும் ஆஸ்பத்திரிக்குச் சென்று தான் இரத்த தானம் கொடுக்க வந்தேன் என்று சொல்ல, டாக்டர், “வேண்டாம். உன் உடல் நிலை கெட்டுப் போகும்,” என்று அவளைத் திருப்பி அனுப்பினார்.

கண்மணி நிலை மாறவில்லை . நாளுக்கு நாள் அவள் உடம்பு வலிமை இழந்து போனது.

அடுத்த வாரம் தமயந்தி கெஞ்சிக் கேட்டபிறகு, இன்னொருமுறை இரத்த தானம் குடுக்க அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அப்போ கண்மணி அவளைக் கூப்பிட்டு, “ உன் பெயர் என்ன? என்மேல் இவ்வளவு அன்பு வைத்துள்ளாயே. இப்பவாவது நீ யாரென்று சொல்,” என்று கேட்டாள்.

அப்ப அவள், “என் பெயர் தமயந்தி. சேந்தனும் உஞ்சுவும் எங்கள் வீட்டில் தான் இருக்கிறார்கள்," என்று கூற, கண்மணி அவள் கைகளைப் பற்றி, “நீதான் இனிமேல் சேந்தனுக்குத் தாயாயிரு,” என்று அன்புடன் சொன்னாள். “இதை மறுக்காதே.”

அடுத்த வினாடி கண்மணி கண்களை மூடினாள். அவள் உயிர் பிரிந்தது.

அங்கு வந்திருந்த நடராசரும் மரகதமும் அதிர்ச்சி தாங்காமல் தவித்துக் கொண்டிருந்தனர். மாமியார் தன் மருமகளைக் கட்டி அணைத்தார்.

அப்ப அங்கே வந்த டாக்டர் கார்த்திக் அவர்களிடம் கண்மணியின் கணவன் ஆண்கள் வார்டில் நினைவற்ற நிலையில் இருந்தான் என்றும் அவன் இரண்டு நாட்கள் முன்னம் இறந்திட்டான் என்றும் தகவல் குடுத்தார்.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று வருடங்கள் உருண்டோடின.

சேந்தனுக்கு இப்போ ஏழு வயது. பக்கத்துப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். உஞ்சு தன் சிநேகிதன் எப்ப திரும்பிப் பள்ளியில் இருந்து வருவான் என்று காத்திருக்கும். விடுமுறை நாட்கள் வந்ததும் இருவருக்கும் ஒரே குஷி. ஒரே கொண்டாட்டம்.

தமயந்தி சங்கரன் தம்பதிக்கு சென்ற வருடம் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவளுக்கு லேகா என்று பெயர் சூட்டினார்கள்.

சேந்தனுக்கு குழந்தை மேல் அளவு கடந்த பாசம். “எப்ப நான் லேகாவை பள்ளிக்கூடம் கூட்டிச் செல்ல முடியும்?” என்று ஆவலுடன் கேட்டவாறு இருப்பான்.

“கொஞ்சம் பொறு சேந்தா,” என்பார் நடராசர். “அடுத்துவரும் தைப்பூசம் அன்று அவளுக்கு ஏடு துவக்க வேண்டும். அதன் பிறகு நீ அவளைக் கூட்டிச்செல்லலாம் பள்ளிக்கூடத்துக்கு.”

சேந்தன் அப்பப்ப கலெண்டரைக் கிளிக்கையில், இன்னும் எத்தனை நாள் தைப்பூசத்துக்கு என்று தப்புத் தப்பாய் எண்ணுவான்.

ஒரு நாள் தமயந்தி அவனை அருகில் அமர்த்தி, “நான் சொல்கிறேன், கேள். ஒவ்வொரு மாசங்களில் எத்தனை நாட்கள் என்று முதல் தெரிந்து வை.

*Thirty days have September*

*April June and November*

*All the others have Thirty-one*

*Except February which has 28 days clear*

*And 29 in each Leap Year*

“சேந்தா, இந்த வரிகளை மனப் பாடம் செய்தால் பிறகு உனக்கு இலேசாக இருக்கும் நாட்களை எண்ண.”

ஒரு நாள் தமயந்தியின் கணவன் சங்கரன், அவுஸ்திரேலியாவில் குடியேறத் தங்களுக்கு வாய்ப்பு வந்திருக்கென்று கொழும்பில் இருந்து பெற்றோருக்கும் மனைவிக்கும் கடிதம் எழுதியிருந்தான். அவன் அனுப்பின விண்ணப்பத்தில் குழந்தை லேகாவின் பெயருடன் சேந்தன் பெயரையும் சேர்த்திருந்தான்.

அன்று பின்னேரம் தமயந்தி சித்தி சேந்தனுக்கு அவுஸ்திரேலியா போகிற செய்தியைக் கூற, அவன் மிக்க சந்தோசத்துடன் உஞ்சுவைக் கட்டி அணைத்து, “நீயும் என்னோடு அவுஸ்திரேலியா போறாய்," என்றான்.

எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்கத்துடங்கினார்கள்.

"சேந்தா, என்ன விளையாட்டுப் பேச்சு?" என்றாள் தமயந்தி அவனைத் தன் மடியில் இருத்தி. "நாங்கள் உஞ்சுவை அங்கே கூட்டிச் செல்ல முடியாது."

"அப்ப நீங்களும் சித்தப்பாவும் போங்கோ. நான் பாட்டா பாட்டி உஞ்சுவோட இஞ்சே இருக்கிறேன்," என்றான் சேந்தன். எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும், அவன் ஒரே பிடிவாதமாய் இருந்தான். "நான் உஞ்சுவோட தான் எங்கேயும் போவேன்," என்று சாப்பிடாமல் அடம் பிடித்தான்.

ஒரு வாரம் கழித்தும் அவன் மனம் மாறவில்லை.

வேறு வழியில்லாது தமயந்தி கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். "தயவு செய்து என்னை மன்னியுங்கோ. நாங்கள் எல்லாரும் இங்கே இருக்கிறது தான் நல்லது. சேந்தன் இல்லாமல் நான் வெளியூர் கிளம்ப மாட்டேன். அவன் தன் செல்லப்பிராணி உஞ்சு இல்லாமல் எங்கேயும் போகமாட்டான்."

---------------




# மனம் உண்டானால்

- அபிதாரணி சந்திரன் -

கிளிகள் கத்தும் சத்தத்தைக் கேட்டு எனது போர்வையை விலக்கி சூரியக் கிரகணங்கள் எனது கண்களைக் கூசச் செய்ய நான் கண் விழித்தேன். எனது நண்பர்கள் அருகில் இன்னும் தூங்கிக் கொண்டிருப்பதை நான் கண்டு அவர்களை எழுப்பி கொட்டை வடிநீரைக் கொடுத்தேன். கொடுத்தபின் நான் எனது கடையைத் திறந்தேன்.

நாங்கள் அனைவரும் ஏழைகள் என்பதை மறந்து விட்டு நம்பிக்கை என்ற மூலதனத்தை வைத்துக் கொண்டு உழைத்தோம். நாங்கள் ஒரு சிறிய பூக்கடை அம்மன் கோவிலுக்கு அருகில் வைத்திருக்கிறோம். வருமானம் அதிக அளவில் இல்லாவிட்டாலும் நான்கு பேருக்குச் சாப்பிட சாப்பாடும் அணிவதற்கு ஆடையும் , தங்குவதற்கு ஒரு சிறிய குடிசையும் இருக்கிறது. நான் தனிமரம் போல் நின்ற பொழுது

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் கலைவதாம் நட்பு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கமைய என்னுடன் சில தோழர்கள் நின்றார்கள்.

எனது நண்பன் விஜய் பூ வித்துக் கொண்டிருந்தான். எனது மற்றைய நண்பன் மாதவனும் நானும் அன்று நடந்த வியாபாரத்தின் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். எனது நண்பன் அதர்வா தபால்ப் பெட்டியிலிருந்து கடிதங்களை எடுத்துக் கொண்டிருந்தான். அனைத்துக் கடிதங்களையும் எனது மேசையில் வைத்து விட்டு ஏதோ ஒன்றை ஒழித்துக் கொண்டு வீட்டுக்குள் கொண்டு செல்ல விரைவாக நடந்தான்.

" அதர்வா அதர்வா எதையோ உன் பின்னால் மறைத்து வைத்திருக்கிறாய் என்னிடம் காண்பி" என்றேன். தடுமாற்றத்துடன்" ஒன்றுமில்லை சிவா என்று கூறினான். 'இல்லைக் காண்பி" என அவனிடம் இருந்து அந்தப் பொருளைப் பறிக்க முயன்றேன். "சரி முதலில் வியாபாரம் முடியட்டும் நான் தூங்கும் முதல் காட்டுகின்றேன்". என அவன் சொன்னதற்கு நான் சம்மதித்தேன்.

வியாபாரம் முடிந்ததும் நாங்கள் சேமித்த பணத்தில் உணவு வாங்கிச் சாப்பிடத் தொடங்கினோம். "சரி சொல்லு மச்சான் என்ன காண்பிக்க இருந்தாய்.? சாப்பிடும் போதே சொல்லிவிடு. பின் நானும் உன்னைக் கேட்க மறந்து விடுவேன். நீயும் சொல்ல மறந்து விடுவாய்". என்றேன். " சரியப்பா இந்தா நீயே படித்துக் கொள்" என சோகத்துடனும் கண் முழுவதும் கலக்கத்துடனும் என்னிடம் ஒரு

*கடிதத்தைக் கொடுத்தான் அதை நான் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன்.*

*வாசித்த பின் எனது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. "டேய் என்னால் முடியுமோ தெரியாதுடா.*

*நான் நடுத்தெருவில் நின்ற பொழுது எங்கே இருந்தார்கள் இவர்கள் எல்லாம்? பதினைந்து வருடங்களுக்கு முன் எனக்கு மகிழுந்து விபத்து நடந்தது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது எங்கிருந்தார்கள்? அதுவும் இங்கு காசு என்ன மரத்திலா காய்க்கிறது. எட்டிப் பிடுங்க? நாங்களே மூன்று வேளைக்கு பக்கத்துக் கடையில் சாப்பிடுகிறோம். இதில் என் மாமா குடும்பத்திற்கு உதவ வேண்டுமா? எனக் கத்தினான்.*

*" டேய் எனது அப்பா ராஜா போல் வாழ்ந்து வந்த நேரத்தில் அனைவரும் அவர் பின்னால் தாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் இறந்தபின் ஒரு சொந்தமாவது திரும்பிப் பார்த்தார்களா? சொல்லு." என்றான் அதர்வா.*

*"மச்சான், நீ எம்.ஜி. ஆர் இரத்தம் உள்ளவனடா. இல்லாதவர்களுக்கு, நீ பஞ்சத்தில் இருக்கும் பொழுதும் கொடுப்பாய். இவர்களையும் அப்படிப் பார்க்க மாட்டாயா?"*

*"இன்னா செய்தாரே ஒருத்தர் அவர் நாண நன்னயம் செய்துவிடு" என்று நீ தானே அடிக்கடி சொல்வாய். மாப்பிள்ளை உன் மச்சாளைத் திருமணம் செய்வதற்கு உனது மாமா ஐந்து பவுண் நகை சீதனமாகக் கொடுக்க வேண்டும். மீதி ஒரு பவுணுக்கு கொஞ்சமாவது உதவலாமே.? நிச்சயமாக உனது மாமாவிடம் உனது வலி மற்றும் கோபத்தைக் கூறுவேன். "மனம் உண்டானால் இடம் உண்டு என்பது போல் நீ மனம் வைத்தால் அவர்களுக்கு உதவலாம்" என்று பரிதாபத்துடன் கூறினான்.*

*அவன் தனது தலையை இல்லை என்ற விதத்தில் ஆட்டினான். நான் குடிசைக்குள்ளே சென்றேன். ஐந்து நிமிடங்களில் கடைக்கு வந்து, நான் கொண்டு வந்திருந்த பையுக்குள் இருந்த தங்க நகைகளை அவனிடம் கொடுத்து "இதை நாளைக்கு அடைமானம் வைத்து உன் மாமாவிற்கு அனுப்பிவிடு" என்றேன்.*

*எங்களது இரவு கடந்தகால நினைவுகளுடனே கழிந்தது.*

# வீட்டில் தமிழ் பயில்வதும் பயிற்றிவிப்பதும்.

-ஆவூரான்-

*புலம் பெயர்ந்த தேசத்தில் தமிழ் இனிவரும் தலைமுறையினருக்கு வளர்த்தெடுப்பதில் பெரும் பாடாக இருக்கின்றது. இதனை எப்படியான முறையில் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்கு இலகுவாக தமிழைக் கற்றுக் கொடுப்பது என்பதை பலரும் பல வளிகளில் முயன்று கொண்டிருக்கும் இந்நேரத்தில் நான் எழுதும் இக் கட்டுரையானது எனது அனுபவத்தையும் அதனால் நான் எனது குழந்தைகளின் மூலம் கொண்ட கற்றறிவையும் கொண்டு தொடர்கிறேன்.*

*முதலில் தங்களின் பிள்ளைகளுக்கு தமிழை வளர்க்க வேண்டும் என்று நினைக்கும் தமிழ் பெற்றோர் எத்தனை பேர் வீட்டில் தனித் தமிழில் பேசுகிறீர்கள் என்பதை உங்களின் மனதை விட்டு சொல்லுங்கள். பாடசாலையில் இருந்து பிள்ளை வீடு வந்ததில் இருந்து நீங்களே கணக்கிட்டீர்களனால் குறைந்தது பதினைந்து சொற்கள் கூட தனித் தமிழில் பேசுவீர்களா என்பது கேள்விக்குறி தான் இந்த நிலையில் தமிழ் தாய் தந்தையர்கள் முதலில் தங்களை மாற்றுவார்களேயானால் உங்களின் பிள்ளைகள் தமிழில் இலகுவாகப் பேசுவார்கள்.*

*சாப்பாட்டுப் பொருளில் இருந்து வீட்டுத் தளபாடங்கள் வரையும் பிள்ளைகளுக்குச் தமிழில் சொல்லிக் கொடுங்கள். அதோடு தமிழ் எழுத்துக்களை வீட்டுச் சுவர் ஒன்றில் உயிர் எழுத்தில் உயிர்மெய் 247 எழுத்துக்களையும் பிள்ளைகளின் கண்ணில் படும் படியாக எழுதி வையுங்கள், எப்போதும் கேட்கும் படியாக தமிழ் போட்டிகளின் பேச்சுக்கள், பாடல்கள், கவிதைகள் போன்றவற்றை உங்களின் குரலில் பதிவு செய்து அவர்கள் சாப்பிடும் போதும், விளையாடும் போதும் கேட்கும் படியாக ஒலிக்க விடுங்கள். அதைக் கேட்டுக் கொண்டு விளையாடு என்று கட்டளையிடாதீர்கள். வாகனத்தில் போகும் போதும் ஒலிக்க விடுவது நன்று. தமிழ் சினிமாப் பாடல்களை விரும்பிக் கேட்கிறார்கள் என்றாலும் அவர்களைத் தடுக்காதீர்கள். நல்ல பாடல்களாக இருந்தால் அவர்களுக்கு பாடலில் வரும் இலக்கியச் சொற்களை விளங்கப் படுத்துங்கள்.*

*இலகுவான சிறிய சொற்களைக் கொண்ட கதைப் புத்தகங்களையோ, தமிழ் பாடசாலைப் புத்தகங்களையோ வாசிக்கப் பழக்குங்கள். அவர்கள் வாசிக்கத் தடக்கும் போது நீங்கள் வாசித்து அவர்களோடு சேர்ந்து பழக்குங்கள். பெரிய சொற்களைக் கொடுத்து எரிச்சல் படும் படியாகவும், வெறுக்கும் படியாகவும் செய்யாதீர்கள்.*

தமிழைச் சொல்லிக் கொடுக்கும் போது நாடகம், நடிப்பு பாட்டு ஏதாவது செய்யச் சொல்லி நீங்களும் செய்து காட்டி பிள்ளைகளோடு கூடி ஆடிப்பாடி நீங்களும் செய்து பாருங்கள்.

வளர்ந்த பிள்ளைகளாக இருந்தால் இராமாயணம், மகாபாரதம், கதைகளோடு பொன்னியின் செல்வன் என்று இன்னும் பல நாவல்களை வாசித்து அவர்களுக்கு வாசிக்கும் ஆர்வத்தினை தூண்டும் விதமாக செய்யவும்.

ஒரு நாளைக்கு பத்து நிமிடம் மட்டும் தமிழில் வாசிக்க பிள்ளைகளோடு செலவழிக்கும் போது பிள்ளைகள் தமிழில் பேசுவார்கள்.

நாம் வாசிக்கும் நல்ல கதைகள், நாம் பார்த்த நல்ல திரைப்படங்கள், திரைப்படப் பாடல்களை நன்கு விளங்கும் படியாக அதன் அர்த்தம் புரியும் படியாக சொல்லிக் கொடுத்துப் பாருங்கள்.

உதாரணமாக புலவர் காளமேகம் அவர்கள் இயற்றிய முருகன் பாடல் செருப்பையும், விளக்குமாற்றையும் வைத்து முருகன் மேல் பாடும் பாடல்

" செருப்புக்கு வீரர்களை சென்றுழக்கும்—வேலன்

பொருப்புக்கு நாயகனை புல்ல- மருப்புக்குத்

தந்தேன் பொழிந்த திரு தாமரை மேல்

வீற்றிருக்கும் வண்டே விளக்குமாறே"

இப்பாடலை தவறாக புரிதலை சொல்லிக்கொடுப்போர் மத்தியில் இப்பாடலின் அருமையான உண்மையை விளக்கிச் சொல்லும் போது தமிழ் படிக்கும் பிள்ளை இப்படியும் பொருள் படுமா என்று ஆச்சரியத்தில் குதிக்கும்.

இன்றைய நவீன் உலகில் தமிழையும் நவீனமாகவும் கலை நயத்தோடும் உங்களின் வீட்டில் பேசுங்கள். முக்கியமாக இக் கட்டுரை தமிழை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படும் பெற்றோர்களுக்கானது. பிள்ளைகளில் பழியைப் போடாதீர்கள். என் அனுபவத்தின் மேல் நின்று கொண்டே இக் கட்டுரையை எழுதினேன். இன்னும் சிறு தொகைப் பிள்ளைகளுக்கு என் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

" தமிழ் எங்கள் மொழி என்று உரக்கச் சொல்வோம்,

# மனிதம் காப்போம்

- சியாமளா யோகேஸ்வரன் -

மதங்கள் கடந்து, வேறுபாடுகள் களைந்து சகமனிதர்களையும் பிற உயிர்களையும் ஏன் இயற்கையையும் நேசிப்பதுதான் மனிதம் எனப்படுகிறது. ஆனால் இப்போது மனிதம் மடிந்து போய், மதம் என்ற பேரில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு, மனிதகுலமே ஒருநாள் அழிந்து போய் விடுமோ என்ற அச்சமே நம்முள் எழுகிறது. ஈடிணையற்று எல்லோருக்கும் வாரி வழங்கக்கூடிய அன்பையும் எல்லையற்ற கருணையையும் பற்றியே மதங்கள் போதிக்கின்றன. ஆனால் மதம் சொல்லும் உண்மையான மார்க்கத்தைப் புரிந்து கொள்ளாமலேயே மதங்கொண்ட விலங்குகளாய், கருணையை இதயத்திலிருந்து சுத்தமாக துடைத்து விட்டவர்களாய், உயிர்களைப் பலியெடுக்கத் துணிந்தவர்களை என்னவென்று சொல்வது? காட்டில் வாழும் விலங்கு போன்று, எந்த ஒழுக்கமும் கட்டுப்பாடுகளும் இன்றி மனிதன் வாழ்ந்து விடாமல், அவனுக்கென்று ஒரு நெறிமுறையை வகுத்து, விலங்குகளை விட ஒரு படி மேலாக பகுத்தறிவு கொண்ட ஜீவியாய் அவனை வழி நடாத்துவதற்காகவே மதம் என்ற கோட்பாடு ஆரம்பிக்கப்பட்டது. போகும் வழி எதுவாயிருந்தாலும் சேருமிடம் ஒன்றே என்பதாகவே அவரவர் தம்மை நெறிப்படுத்தவென வெவ்வேறு மார்க்கங்களைத் தெரிவு செய்தனர். எம்மில் எத்தனை பேருக்கு அவரவரின் மதம் காட்டும் வழிமுறையில் பாதியளவாவது தெரிந்திருக்கிறது? கண்களை மூடிக்கொண்டு கடவுளின் நாமத்தை உச்சரிப்பதாலோ, தினமும் கோயிலுக்குச் செல்வதாலோ, வேறு ஒருமதத்தைப் பின்பற்றுபவனின் மனதைக் கெடுத்து மதம் மாற்றுவதாலோ உண்மையான சமயத்தைப் பின்பற்றும் ஒருவராக ஆகி விட முடியாது. சகமனிதனை மனிதனாக மதிக்க முதலில் பழகிக் கொள்ள வேண்டும், காணும் ஜீவராசிகளிலெல்லாம் கருணையைப் பொழியத் தயாராக இருக்க வேண்டும், அடுத்தவனின் வேதனையை உணரும் அளவுக்கு நம் இதயத்தில் ஈரம் இருக்க வேண்டும். அப்படியானவன் மதம் என்ற எல்லையைத் தனக்குத்தானே போட்டுக் கொள்ள மாட்டான். அவன் மதங்களைக் கடந்து அனைத்து உயிரிலும் இறைவனைக் காணும் மகாத்மாவாகவே மாறி விடுவான்.

ஒரு மதத்தை அழிப்பதற்கு அம்மதத்தவனை எப்படி அழிப்பது என்று சிந்திப்போமானால் அடிப்படையில் நாம் ஒரு மனிதனாகவே இல்லை என்பதைப் புரிந்து கொண்டு முதலில் நம்மை நாமே சரிப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். மாற்றம் என்பது முதலில் எம்மிலிருந்து தான் தொடங்க வேண்டும். இறைவனின் சிருஷ்டியின் சிருங்காரத்தில் மனிதனும் ரகம் ரகமாய் பல்வேறு

வகையில் தான் படைக்கப்பட்டிருக்கிறான். நாம் காணும் அனைவரும் நல்லவராய் மட்டுமிருந்து விட்டால் வாழ்க்கை எத்தனை நன்றாயிருக்கும்? ஆனால் முகத்தை நீட்டும் மனைவி, முன் கோபக்கணவன், சொற்கேளாப் பிள்ளைகள், எதுவுமே தெரியாத உயரதிகாரி, ஒத்துழைக்க மாட்டா சகஊழியர்கள், நட்பை மதிக்காத நண்பர்கள், விலங்குகளாய் உலாவும் அந்நியர்கள் என்று நல்லவராய் இருக்கத் துடிக்கும் நமக்கு சவால் விடுவதாகவே தினமும் எத்தனை நிகழ்வுகள் எம்வாழ்வில் நடைபெறுகின்றன. ஆனால் அந்த நாளின் முடிவில் மதம் சொல்லும் நன்னெறிகளை நாம் மனம் உணர்ந்து வாசிக்கும் போதோ, அல்லது மனம் ஒன்றிக் கேட்கும்போதோ வழிமாறத் துடிக்கும் மனது தானாகவே சாந்தம் கொண்டு விடுகிறது. வாழும் வாழ்க்கையில் துன்பங்களால் தடம் புரளாமல் நல்வழியில் செல்லும் மார்க்கத்தைத்தான் மதங்கள் சொல்கின்றவே தவிர ஆயுதத்தைக் கையில் எடுத்து சக உயிரின் இரத்தத்தைக் குடித்து அந்த உயிரைப் பறிப்பதற்கான உரிமையையோ அல்லது அதிகாரத்தையோ அவை எமக்குத் தரவில்லை.

உயிர் என்பது எவ்வளவு முக்கியம் என்பதும், உயிர் வாழும் கணங்கள் எவ்வளவு முக்கியம் என்பதும் யுத்தசூழலில் வாழ்ந்த அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஆண்டாண்டு காலமாய் எம்மனதில் ஒட்டப்பட்டிருக்கும் பாவ புண்ணியத்தைப் பற்றிய பயக்கணக்காலோ அல்லது இறை பயத்தாலோ அடுத்தவனுக்கு தீங்கு நினைக்கும் மனப்பான்மை நம்முள் இலகுவில் எழுந்து விடாதிருந்திருக்கக் கூடும். அதுமட்டுமல்லாமல் நாம் கடந்த சிறார்ப்பருவத்துக்கும், இந்த சந்ததியினரின் சிறார்ப்பருவத்துக்கும் அடிப்படையிலேயே சில வேறுபாடுகள் இருக்கின்றன. எம்மிடையே ஆயிரம் வேறுபாடுகள் இருப்பினும் அண்டைச்சிறுவர்களுடன் அனுசரித்து விளையாடி இருந்திருக்கிறோம். அது சிறுவயதிலேயே எமக்கு சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் மட்டுமல்லாமல் சகிப்புத் தன்மையையும் கற்றுக் கொடுத்திருக்கிறது.

நாம் சிறார்களாக இருந்தபோது, மாரி காலமென்றால் குளிர் என்பதோடு எல்லோருக்கும் நன்றாக நினைவிலிருக்கும் இன்னொரு விடயம் தம்பளப்பூச்சி ஆகும். எட்டுச் சின்னக்கால்களோடு, வெவ்வேறு அளவுகளில் ஈரமண்ணில் இறைவன் போட்ட கோலமென, இரத்த வண்ணத்தில் தொட்டால் துவண்டு விடும் பட்டுப்போன்ற மெல்லிய உடலோடு பையப்பைய ஊர்ந்து செல்லும் இந்த தம்பளப்பூச்சிகள் யாருக்குமே எந்தக்கெடுதலுமே செய்யாதவை. இந்தக் தம்பளப்பூச்சிகளை மிதித்து விடாமல் நடப்பதே ஒரு வித்தையென எமது சின்னக் காலடிகளை எத்தனை கவனமாக எடுத்து வைத்திருப்போம், ஆனாலும் தவறுதலாக மிதித்து விட்டதால் உயிரிழந்த ஒரு தம்பளப்பூச்சிக்காக அழும் போது "இந்த உலகத்தில் பிறந்த எல்லோரும் என்றோ ஒரு நாள் சாகத்தானே வேண்டும், அதன் காலம் முடிந்து விட்டது அவ்வளவுதான் இதுக்குப்போய் அழலாமா?" என்று எமக்குப் புரிந்ததோ இல்லையோ உலகத்தின் நிலையாத் தத்துவத்தைப் பற்றி அன்னை விளக்கம் சொல்லி எம்மைத் தேற்றியிருப்பார். ஆனாலும் அந்தக் கம்பளப்பூச்சியின் அம்மா அப்பா "பிள்ளையைக் காணவில்லை" என்று தேடப் போகிறார்களே, தெரியாமல் மிதித்துக் கொன்று விட்டோமே என்ற கவலை எம் பிஞ்சு மனதை சில நாட்களுக்காவது பிசைந்திருக்கும். அதற்குப்பிறகு ஒவ்வொரு அடியையும் மிகமிகக்கவனமாக எடுத்து வைத்து நடந்த நாட்கள், உயிரின் மதிப்பை உணர்த்திய சம்பவங்களாய், இன்றும் கருணை என்ற கண்ணியத்தை எம்மனதில் ஒட்டி வைத்திருக்கின்றன.

ஆனால் இப்போது செல்போனில் கேம் என்ற பெயரில் நம் அடுத்த சந்ததி விளையாடும் விளையாட்டில் எத்தனை பேரைக் கொல்கிறார்களோ அதில்தான் வெற்றி என்பதில், எதிரியை ரத்தம் கொப்புளிக்க கொப்புளிக்கச் சுடுவதையும் கத்தியால் வெட்டுவதையும் பார்க்கும் போது எமக்கே பகீரென்று இருக்கிறது. ரத்தத்தைக் காண்பதும் உயிரை அழிப்பதும் அவர்கள் மனதில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத போது நிஜ வாழ்விலும் அவர்களுக்கு அது சர்வசாதாரணமாகவே இருப்பதால்தான் வன்முறை என்பது வளரும் சமுதாயத்தின் மனதில் இலகுவாகவே ஒரு களையாகப் பரவி விட்டது. மனித உயிரின் மகத்துவமும் உறவுகளின் அருமையும் இந்தக்காலத்துப் பிள்ளைகளுக்குப் புரியவேயில்லை என்பது மன வருத்தத்துக்குரிய ஒரு விடயமாகும்.

காட்டில் வாழும் விலங்கு கூட தனது பசியைத் தீர்த்துக்கொள்ள மட்டுமே இன்னொரு உயிரை வேட்டையாடுகிறது. ஆனால் விஞ்ஞானத்தில் உச்சம் தொட்ட ஆறறிவு கொண்ட மனிதனோ, தன் கோபத்தை இறக்கி வைக்கவோ அல்லது ஏதோவொரு அற்பகாரணத்தைச் சொல்லியோ சகமனிதனின் உயிரைத் தயவுதாட்சணியம் இல்லாமல் பறித்தெடுக்கிறான். ஒருவரின் இழப்பால் வருந்தும் குடும்பத்துக்கு, யாரால் என்ன விதத்தில் தேறுதல் சொல்ல முடியும்? அல்லது எவ்வகையில் அந்த இழப்பை இன்னொருவரால் ஈடு செய்ய முடியும்?

விபத்து என்பது எதிர்பாராமல் ஏற்படும் ஒன்றுதான் அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் உயிர்களைப் பலி வாங்க வேண்டும் என்பதற்காகவே முன் கூட்டியே திட்டமிட்டு, அதற்காக அபத்தமான விளக்கங்களைக் கூறி எந்தக் குற்றவுணர்ச்சியோ பரிவிரக்கமோ இல்லாமல் இன்னொரு உயிரைப் பலியெடுப்பது என்பது மிகக் கொடூரமானது. எமது கவனமின்மையால் ஏற்படும் விபத்தில் ஒரு உயிரிழப்பு நிகழுமானால் அல்லது ஒருவருக்கு

நிரந்தரமாக ஒரு அங்கவீனம் ஏற்படுமானால் அந்தக்குற்ற உணர்ச்சி காலம் முழுவதும் கொல்லும் என்பது ஒருபுறமிருக்க, இன்னொருவரின் மகனாக, கணவனாக, தந்தையாக, சகோதரனாக, நண்பனாக இருக்கும் ஒரு நபரை நாம் உலகத்தில் இருந்தே இல்லாமற் பண்ணியிருக்கிறோம் என்றால் அது இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் எமது மனசாட்சியை உறுத்தத் தொடங்கினால் சாகும் வரை நிம்மதியை நிரந்தரமாகத் தொலைத்து விடுவோம் என்பது நிச்சயமான ஒரு உண்மை. அத்துடன் இறைவன் கொடுத்த எமது உயிரை எடுக்க எமக்கே உரிமையில்லை என்னும் போது அடுத்தவரின் உயிரைப் பறிக்கும் அதிகாரத்தை யார் நமக்குக் கொடுத்தது?

உன்னதமான ஒரு கொள்கைக்காய் பல உயிர்ப்பலிகளைக் கண்ட எம் சொந்த மண் தொடக்கம் பல்வேறு நாடுகளிலும் இத்தகைய இழப்புகள் இன்னமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன? நிலையற்ற வாழ்வில் நித்தம் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன்தான் அனைவரும் வாழ வேண்டியிருக்கிறது என்றால் அது எமது மனித இனத்தின் சாபமா? குரோதங்களைக் களைந்து, இனமதபேதங்களைத் தாண்டிய மனிதம் என்ற உணர்வுடன் மனித இனம் வாழத் தலைப்படுமாயின் பூமிப்பந்தில் இனியாவது அன்பும் அறனும் நிலவும். துப்பாக்கிக்கலாசாரத்தையும் வன்முறைகளையும் களைய சட்டமும் நீதியும் ஆவன செய்யுமாயின் தரணியெங்கும் இனியாவது அமைதி தவழும். தவறான கொள்கைகளைத் தாங்கி, வன்முறை வழியில்தான் செல்வது என்று முடிவெடுத்து விட்டோமானால் அழிவைச் சந்திப்பதை தவிர, மனிதஇனத்தை இனி எந்தக் கடவுளாலும் காப்பாற்றவே முடியாது.

# நிலா நிலா ஓடி வா!!



*நிலா நிலா ஓடி வா*
*நில்லாமல் ஓடி வா மலை மீது ஏறி வா*
*மல்லிகை பூ கொண்டு வா*

*வட்ட வட்ட நிலாவே*
*வண்ண முகில் பூவே*
*பட்டம் போல பறந்து வா*
*பம்பரமாய் சுற்றி வா*
*பவிசன் பிரதீபன் –*



*- கிரிசிகன் சீவராஜா -*

*இன்றைய நவீன காலத்தில், மனித இனம் ஒற்றுமையாக. வாழ்வதைக் காண்பது மிக அரிதாக உள்ளது. அதாவது, இன, மொழி, மத, வேறுபாடுகளின் காரணமாக இந்த ஒற்றுமை இல்லாமல் போகின்றது. இதனால் மனிதர்கள் ஒரு அச்சத்துடன் வாழவேண்டிய நிலை உள்ளது. இந்த ஒற்றுமை இன்மையிற்கு காரணம், மனிதர்கள் ஒருவருக்கொருவர் நேசிப்பது மிகவும் குறைந்துக்கொண்டு வருகிறது. இது நாட்டுக்கு நாடுமட்டுமல்லாமல் சில வீட்டிற்கு வீடும் இந்நிலையும் இருப்பதை காணலாம். இந்த நிலையை மாற்றுவதற்கு, ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் அன்புடனும் பாசத்துடனும் மரியாதையுடனும், பழகுவது சிறந்தது. உதாரணமாக குடும்பத்திற்கு குடும்பம் அன்பு பாசத்துடன் வாழவேண்டும்.*

*முதலில், குடும்பம் என்றால் என்ன? என்று பார்ப்போமானால், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் ஒரு வீட்டில் வசிக்கின்ற நிலை என்பது தான் குடும்பம். உலகத்தில் பலவிதமான குடும்பங்கள் இருக்கின்றன: கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம், தத்தெடுத்த குடும்பம் போன்ற குடும்பங்கள் இருக்கின்றன. எப்படி பட்ட குடும்பமாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக, அன்பாக இருப்பதால்தான் குடும்பங்கள் ஆரோக்கியமாக,அமைதியாக, சந்தோசமாக வாழக்கூடியதாக இருக்கும்.*

*இதில் கூட்டுக்குடும்பம் ஒரு விதமான குடும்பம் ஆகும். ஒரு கூட்டு குடும்பம் என்பது ஒரே வீட்டில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தலைமுறைகளைக் கொண்ட குடும்பம். இதில் ஒரே வீட்டின் கீழ் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, பெரியப்பாக்கள், பெரியம்மாக்கள், சித்தப்பாக்கள், சித்திமார், மாமாக்கள், அத்தைகள், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார் என்று எல்லோரும் சேர்ந்து ஒன்றாக வாழ்வதே கூட்டுக்குடும்பம். எமது முன்னோர்கள் இப்படியாக கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தார்கள்.*

*இதைத் தவிர தனிக்குடும்பம் இருக்கின்றது. பிள்ளைகள் திருமணம் செய்த பின் பெற்றோர்களைப் பிரிந்து தனியாக வாழ்வதுதான் தனிக்குடும்பமாகும். இந்த குடும்பத்தில் அவர்கள் ஒன்று இரண்டு குழந்தைகளை பெற்று சிறியக்குடும்பமாக வாழ்வார்கள். இப்போதெல்லாம் தனிக்குடும்பம் தான் கூடுதலாக இருக்கின்றன.*

*அதைவிட, தத்தெடுத்த குடும்பங்களும் உண்டு. தத்தெடுத்த குடும்பமென்றால், பெறறோர்களை இழந்த பிள்ளையாகவோ, பெற்றோர்களால் வளர்க்க முடியாத பிள்ளையாகவோ, பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளையாகவோ இருக்கும் ஒரு பிள்ளையை சட்டபூர்வமாக ஒரு குடும்பம் அவர்களின் குழந்தையாக மாற்றுவதுதான் தத்தெடுத்தல் ஆகும். இப்படித் தத்தெடுத்த பிள்ளையுடன் வாழுவதே தத்தெடுத்த குடும்பம் ஆகும்.*

*எந்த குடும்பமாக இருந்தாலும் அவர்கள் குடும்பத்துடன் தமது நேரத்தை செலுத்தும் போது அவர்களின் மேல் இன்னும் அன்பு கூடும். அத்துடன் ஒரு பிணைப்பும் ஏற்படும். இந்த பிணைப்பால் ஒரு நம்பிக்கையான வளர்ப்பு ஏற்படுகிறது. எதுவாக இருந்தாலும், நம்முடைய கடினமான காலங்களில் எங்களுடன் இருப்பதற்கு, எம் குடும்பத்தினர் இருப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கை ஏற்படும். எம் குடும்பத்தின் மூலம்தான் அன்பு, நம்பிக்கை, கலாச்சாரங்கள், ஒழுக்கங்கள், மரபுகள் போன்றவற்றை நாம் கற்றுக்கொள்கிறோம். எந்தவொரு பலமான பிணைப்பும் ஒரு குடும்பத்தின் ஆதரவால் வருகிறது.*


*நல்லதொரு குடும்பம், நம் வாழ்க்கையில் நாம் பெறும் மிகப் பெரிய பரிசுகளில் ஒன்றாகும். உண்மையில் நாம் கடவுளிடமிருந்து பெறும் முதல் பரிசு. நாம் பிறக்கும்போது எங்களை பாதுகாத்து எங்களை வளர்பதற்காக எங்கள் பெற்றோர்கள் இருப்பார்கள். அவர்கள் எங்களை படிப்பித்து, கவனித்துக்கொண்டு எங்களை வாழ்க்கை பூரா அன்பை காட்டி எங்களை வளர்ப்பார்கள். அன்பான பெற்றோர்கள் மட்டுமல்ல, எம்மை வடிவாக கவனித்து நேசிக்கும் சகோதர, சகோதரிகளும் ஒரு பரிசுதான். வாழ்க்கையில் இந்த பரிசுகள் நாம் வாங்கவோ கோரவோ முடியாது. இக்காரணமாக நாம் இந்த பரிசை சந்தோசமாக பெற்று அதை சரியாக பயன்படுத்த வேண்டும். அதாவது, அன்பாக, ஒற்றுமையாக வாழ பழகவேண்டும், முயற்சிற்கவேண்டும். ஆனால் இந்த காலத்தில் அது ஒரு சிரமமாகவே இருகின்றது.*

*ஏனென்றால், தொழில்நுட்பத்தின் காரணமாக, குடும்ப பாசங்கள் விலகிச் செல்கின்றன. ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் தங்கள் தொலைபேசிகள், கணினிகள் மற்றும் தொலைக்காட்சிகளில் தங்கள் நேரத்தை செலவிடுகிறார்கள். முகப்புத்தகளில் பெற்றோர்களும், 'இன்ஸ்டாகிராமில்' குழந்தைகளும், தங்களுடைய முழு நேரத்தையும் செலவிடுகிறார்கள். இப்போதெல்லாம் ஒரு குடும்பமாக எந்த நேரமும் செலவிடப்படுவதில்லை. இது தொடர்ந்தால், மக்கள் ஆரோக்கியமற்ற மற்றும் தனித்தனியாக*

தங்கள் வாழ்க்கையை வாழும் நிலையே ஏற்படும்.

இதை நிறுத்த செய்யவேண்டிய வழிகள் என்னவென்றால், குடும்பத்துடன் வெளியே செல்லவேண்டும்: முழு குடும்பமும் ஓய்வாக இருக்கும்போதோ, வேலையோ, பள்ளிக்கூடமோ இல்லாத போதெல்லாம், முழு குடும்பத்தினருடன் எங்காவது செல்வது நல்லது. அதாவது, அந்த நேரத்தில் திரைப்பட கொட்டகையிற்கு செல்லலாம், ஒரு உணவகத்தில் சாப்பிடலாம், ஒரு பொழுதுபோக்கு பூங்கா அல்லது கடற்கரைக்குச் செல்லலாம். உங்கள் குடும்பத்தினருடன் பார்வையிட பல இடங்கள் உள்ளன. நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லவில்லை என்றால் பரவாயில்லை. அவர்களுடன் நேரத்தை செலவிடுவது முக்கியம். அவர்களுடன் மதிய உணவு அல்லது இரவு உணவு சாப்பிடுவது கூட உங்கள் குடும்பத்தினருடனான உறவை வளர்க்கிறது. நீங்கள் அவர்களுடன் சாப்பிடலாம் மற்றும் அரட்டையடிக்கலாம், இதனால் நீங்கள் உங்கள் குடும்பத்தினர் பற்றி மேலும் அறியலாம். இதை போல், எமது குடும்பம் மட்டுமில்லாமல் உற்றார் உறவினர் நண்பர்கள் குடும்பத்துடன் அன்பாக, ஒற்றுமையாக எமது நேரத்தை செலவுசெய்தால், எமது மனித சமுதாயம் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக வாழ முடியும். வீட்டிற்கு வீடு அன்பாக, ஒற்றுமையாக இருந்தால் அதுவே ஒவ்வொரு நாட்டிற்கு நாடு இன, மத, மொழி வேறுபாடின்றி மனித குலம் ஒற்றுமையுடன் மேலோங்கி சிறப்புடன் வாழும் என்பதில் ஐயமில்லை.

"ஒற்றுமையே உயர்வுக்கு வழி"



## நான்

ஔவையாரின் தமிழ் ஆற்றலை கொண்டவன் நான்,

அன்னை திரேசாவின் இரக்க மனதை கொண்டவன் நானே.

அறிவில் அப்துல் கலாமின் வழி வந்த சீடன் ஆவேன்,

கட்டபொம்மனையே எதிர்க்கும் வீரத்தை கொண்டவன்.

சரஸ்வதியின் 64 கலைகளையும் கற்ற மேதாவி நான்,

காந்தியின் நாட்டுப் பற்றைக் கொண்டவன் ஆவேன்.

நக்கீரனைப் போல வாக்கில் வல்லமை பெற்றவன் நான்,

ஆண்டாளைப் போல பக்தியில் சிறந்தவனே.

கர்ணனைப் போல் கொடை வள்ளல் ஆவேன்,

தர்மனைப்போல் உண்மையே உரைப்பேன்.

அழகுக்கு முருகனை போன்றவன் ஆவேன்,

நீதிக்கு மனுநீதிச்சோழன் போன்று மாறுவேன்.

நட்பினில் குகன் போன்றவன் நான்,

சொல்லுக்கு அகத்தியர் போன்று ஆவேன்.

ஏகலைவன் போல குரு பக்தியில் சிறந்தவன் நான்,

இராவணனோடு இசையில் போட்டியிட்டு வெல்வேன் நானே.

மகாகவி பாரதி போல,

நானும் ஓர் கவிஞன் ஆவேன்.

## ICC World cup 2031

*- சி. விதுஜன் -*

*எனது கண்கள் பந்தை உற்றுப் பார்த்தன. இப்பொழுது பந்தை எறிகின்றவர் ஒரு உலகப் புகழ் பெற்ற பந்து வீச்சாளர். அவர் விரைவாக ஓடி வந்து பந்தை வீசினார். பந்து வீசியதும் நான் எனது துடுப்பால் பந்தை அடித்தேன். நான் நான்கு ஓட்டங்கள் பெற்றேன். நாங்கள் இந்த துடுப்பாட்டப் போட்டியில் வெற்றி பெற்றோம்.*

*அடுத்த போட்டியின் போது நான் விளையாட்டு மைதானத்தை நோக்கி நடந்தேன். நான் விரைவாக நடக்கும்போது படியில் விழுந்தேன். எனது அணி வைத்தியர் இதைக் கண்டு மற்ற வைத்தியரை கூப்பிட்டார். எல்லோரும் என்னை முதலுதவி அறைக்கு கொண்டு போனார்கள். நான் அடுத்த இருபத்தொரு நாட்கள் விளையாடவில்லை. எனது அணி அடுத்த ஏழு போட்டிகளிலும் தோல்வி அடைந்தது.*

*அதற்குப் பின் எனது அணியினர் மிகவும் கடினமாக வேலை செய்தார்கள். நான் திரும்பி நன்றாக வந்து மற்றப் போட்டிகளில் விளையாடினேன். அடுத்த பதின்மூன்று போட்டிகளில் நாங்கள் வென்றோம். அரை இறுதிப் போட்டிக்கு நாங்கள் தெரிவு செய்யப்பட்டோம். நாங்கள் அரை இறுதிப் போட்டி வென்றோம். பின்பு நாங்கள் இறுதிச் சுற்றில் விளையாடினோம். நாங்கள் நன்றாக விளையாடினோம். நாங்கள் இத் துடுப்பாட்டத் தொடரில் வென்றோம்.*

----------------------

# அவுஸ்திரேலியா

*- நமீஷ்-*

*எனது நாடு அவுஸ்திரேலியா. இது ஒரு சிறிய கண்டம். இங்கு ஆறு மாநிலங்களும் இரண்டு மண்டலங்களும் உள்ளன. அவுஸ்திரேலியாவின் தலைநகரம் கான்பரா. மிகப் பெரிய நகரம் சிட்னி. பல ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் பழங்குடியினர் வாழ்ந்து வந்தார்கள். அவுஸ்திரேலியாவில் பல விலங்குகளும் உள்ளன. இங்கு பல இன மக்களும் வாழ்ந்து வருகிறார்கள்.*

# தமிழர்களின் கணிதம்

*-மெர்சி -*

*பண்டைய தமிழர்கள் கணிதப் புலிகளாக இருந்தார்கள். அவர்கள் கணிதத்தை அன்றாட வாழ்வில் பயன்படுத்தியது மிக வியப்பாக உள்ளது. கீழே உள்ள கணித முறைகளை பயன்படுத்திப் பாருங்கள்.*

*பலாப்பழச் சுளை எண்ணிக்கை*

*பலாப்பழத்தைப் பிடித்துத் தூக்கும் பலாப்பழக் காம்பின் அருகே சுற்றியிருக்கும் சிறு முள்ளுகளை எண்ணி அதை ஆறால் பெருக்கி ஐந்தால் பிரிக்க வருவது சுளைகளின் எண்ணிக்கையாகும்.*

*நீட்டு கூட்டு மடக்கு பெருக்கு*

*5க்கும் மேலுள்ள எண்களைப் பெருக்க இந்த முறை பயன்படுகிறது. 7ஐயும் 8ஐயும் பெருக்க வேண்டும் என எடுத்துக்கொள்ளுங்கள். இதில் இரண்டு எண்களிலிருந்தும் 5ஐ கழித்துவிடுங்கள்.7ல் மீதமுள்ள எண் 2. இதற்கு சமமாக ஒரு கையில் இரண்டு விரல்களை நீட்டிக் கொள்ளுங்கள். 8லிருந்து 5ஐ கழித்துவிட்டு, 3 விரல்களை நீட்டுங்கள். இப்பொழுது இரு கைகளிலும் நீட்டியுள்ள விரல்களின் எண்ணிக்கை 5. அதாவது இது 10வது ஸ்தான எண். தற்போது மடக்கியுள்ள விரல்களைக் கவனியுங்கள். இரண்டையும் பெருக்கினால் 6. இது ஒராவது ஸ்தான எண். 56 என்ற சரியான பதில் கிடைத்ததா?*

*பூசனிக்காயை உடைக்காமலேயே*

*விதைகளின் எண்ணிக்கை அறிதல்*

*பூசனிக்காயின் கீற்றுக்களை எண்ணிக்கொண்டு 135ஆல் பெருக்கி வருவது விதைகளின் எண்ணிக்கையாகும்.*

*இவற்றை எல்லாம் முயற்சித்திப் பாருங்கள். நீங்களும் ஆச்சரியப்படுவீர்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே இதையெல்லாம் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.*

# அரிது அரிது மானிடராதல் அரிது.

*- திருமதி சாந்தி சந்திரகுமார். -*

*பிறப்பு என்ற ஆரம்பத்திற்கும் – இறப்பு என்ற முடிவுக்கும்*

*இடையில் மனிதன் பல வழிகளில் தடுமாறுகின்றான்.*

*மனிதன் மனிதனாக வாழ 18 அம்சங்கள்*

*மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் – தாய் தந்தை*

*மிக மிக நல்ல நாள் – இன்று*

*மிகப் பெரிய வெகுமதி – மன்னிப்பு*

*மிகவும் வேண்டியது – பணிவு*

*மிகவும் வேண்டாதது – வெறுப்பு*

*மிகப் பெரிய தேவை – நம்பிக்கை*

*மிகக் கொடிய நோய் – பேராசை*

*மிகவும் சுலபமானது – குற்றம் காணல்*

*கீழ்த்தரமான விடையம் – பொறாமை*

*நம்பக்கூடாதது – வதந்தி*

*ஆபத்தை விளைவிப்பது – அதிக பேச்சு*

*செய்யக்கூடாதது – நம்பிக்கைத் துரோகம்*

*செய்யக் கூடியது – உதவி*

*விலக்க வேண்டியது – சோம்பேறித்தனம்*

*உயர்வுக்கு வழி – உழைப்பு*

*நழுவ விடக்கூடாதது – வாய்ப்பு*

*பிரியக்கூடாதது – நட்பு*

*மறக்கக் கூடாதது – நன்றி*

# குளிருக்கு காபி குடிக்கலாமா?

*காலையில் எழுந்தவுடன் நம்மில் பலர் நம் நாளை ஆரம்பிக்க ஒரு டம்ளர் காபி குடிக்கின்றோம். சர்வதேச காபி அமைப்பின் கருத்துப்படி ஒவ்வொரு நாளும் 1.6 பில்லியன் காபி உலகளாவிய அளவில் நுகரப்படுகிறது. காபியில் முக்கிய மூலப் பொருள் காஃபின் (caffeine) ஆகும். காபி குடிப்பதில் நிறைய நன்மைகளும் தீமைகளும் உள்ளன.*

*கடந்த வருடம் "மருத்துவ செய்திகள் இன்று", ஓர் நாளைக்கு மூன்று கப் காபி உட்கொள்வது கல்லீரல் புற்றுநோயின் அபாயத்தை 50% குறைக்கலாம் என்று ஒரு ஆய்வில் தெரிவிக்கிறது. ஒரு நாளுக்கு நான்கு கப் காபி குடிப்பது வாய் மற்றும் தொண்டை புற்றுநோயின் அபாயத்தை பாதி அளவு குறைக்கும் என்று மற்றொரு ஆய்வு கூறுகிறது.*

*கடந்த ஆண்டு "ஹார்வார்டு பள்ளி" பொது சுகாதாரத்தின் ஒரு ஆய்வில், இரண்டு மற்றும் நான்கு கப் காபி ஒரு நாளுக்கு குடிப்பது பெரியவர்கள் தற்கொலைத் தாக்குதலைக் குறைக்கலாம் என்று கூறுகிறார்கள். அதே நேரத்தில், சமீபத்திய ஆய்வில் ஒவ்வொரு நாளும் 200 மில்லி காஃபின் நீண்ட கால நினைவு தருகின்றது என்று கூறப்பட்டிருக்கிறது. மற்ற ஆய்வுகள் காஃபின் உட்கொள்வது இரண்டாவது வகையான சர்க்கரை நோய், 'பார்கின்சன்' நோய், இதய நோய் மற்றும் பக்கவாதத்தை தடுக்கும் என்று பரிந்துரைக்கின்றன.*

*'மயோ' கிளினிக் மாநிலம், 500-600 மில்லி காஃபினை தினமும் உட்கொண்டால், தூக்கமின்மை, பதற்றம், அமைதியின்மை, எரிச்சல், வயிற்றுப்போக்கு, வேகமான இதயத் துடிப்பு மற்றும் தசைப் பிடிப்புகளுக்கு வழிவகுக்கும் என்று கூறி உள்ளது. கடந்த வருடம், 'மருத்துவ செய்திகள் இன்று', கர்ப்ப காலத்தில் 300 மில்லி காஃபின் உட்கொண்டால், மிகக் குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறக்கும் ஆபத்து வரும் என கூறியுள்ளது. அதே சமயத்தில், நான்கு கப் காபி ஒரு நளைக்கு குடிப்பதால், முன்கூட்டிய மரண ஆபத்து அதிகரிக்கும் என்று ஒரு ஆய்வு கூறியுள்ளது.*

*அது மட்டுமல்ல, குழந்தைகள் காபி குடிப்பது மிக பெரிய ஆபத்து. காபி குடிப்பதின் அளவை குறைத்தால், நீண்ட காலம் உயிர் வாழலாம்.*

# தமிழ் புத்தாண்டும் தமிழர்களும்

தமிழ் புத்தாண்டு, தமிழர்களால் கொண்டாடப்படுகிற ஒரு பண்டிகை ஆகும். தமிழ் புத்தாண்டு சித்திரை மாதம் பதின்நான்காம் திகதியில் கொண்டாடப்படுகிறது.

தமிழ் புத்தாண்டன்று நான் குளித்து முடிய புது ஆடைகளைப் போட்டு என் குடும்பத்தோடு கோவிலுக்குச் சென்றேன். தமிழ் புத்தாண்டன்று தமிழர்கள் அனைவரும் தமிழ் புத்தாண்டை எவ்வாறு கொண்டாடினார்கள் எனப் பார்ப்போம். தமிழ் புத்தாண்டன்று நாம் அதிகாலையில் எழும்பி தலைக்கு எண்ணை தேய்த்துக் குளித்து, புத்தாடை அணிந்து கோவிலுக்குச் சென்று பின்னர் தாய், தந்தை மற்றும் பெரியவர்களின் காலில் விழுந்து அவர்களின் ஆசிர்வாதத்தினை வாங்குவது வழக்கம். பின்னர் பெற்றோர் மற்றும் பெரியவர்களிடம் கைவிஷேசம் பெற்றும் கொடுத்தும் மகிழ்வார்கள்.

பின்னர் விருந்தினர் வீட்டிற்குச் சென்று அவர்களுடன் சேர்ந்து புத்தாண்டு நாள் முழுவதும் பட்டாசுகளை கொழுத்தியும், சிற்றுண்டிகள் உண்டும் மகிழ்வார்கள். அந்த நாள் முழுவதும் குதூகலமாக பெரியவர்களும் சிறியவர்களும் புத்தாண்டினை கொண்டாடுவது அதன் சிறப்பம்சம் ஆகும்.

இதனால் தமிழர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் தமிழ்ப் பண்டிகை என்பது தனித்து விளங்கும் ஒரு தினம் ஆகும். இப்பண்டிகைகள் கொண்டாடும் முறைகள் மற்றைய கொண்டாட்டங்களை விட தனித்து விளங்குவது இதன் சிறப்பாகும்.

---------------------

# ஆகா அது போதும்

- நிதிலன் -

ஒரு பள்ளி ஆசிரியர் மாணவர்கள் விடுமுறையில் செல்லும்போது ஒவ்வொரு மாணவனையும் அழைத்து "உங்கள் ஊரில் என்ன விளைகிறது" என்று கேட்டார்.

நெல் விளைகிறது, சோளம் விளைகிறது, கேழ்வரகு விளைகிறது என்று சொன்னால் வரும்போது அதைக் கொண்டு வந்து கொடுக்கும்படி சொல்லி விடுவார். இது அவர் வழக்கம்.

ஒரு தந்திரகார மாணவன் "எங்கள் ஊரில் பாறை தான் இருக்கிறது" என்று சொன்னான்.

"அப்படியா, பலே, ஒரு அம்மியும் ஒரு ஆட்டுக்கல்லும் செய்து எடுத்து வா" என்றார் ஆசிரியர்

# எனக்குப் பிடித்த செல்லப் பிராணி

-கரிஸ் ஜெகன்-

செல்லப் பிராணி என்பது வீட்டில் வளர்க்கும்
நாய் , பூனை, மீன் , முயல் என்பன ஆகும்.
எனக்குப் பிடித்த செல்லப்பிராணி நாய்.

நாய்க்கு நான்கு கால்கள் உண்டு.

நாய்க்கு இரண்டு காதுகள் உண்டு.

நாய் வள் வள் என்று சத்தமாக குரைக்கும்

நாய் வேகமாக ஓடும்


நாய்க்கு கேட்கும் திறன் அதிகம்.

நாய் அழகாக இருக்கும்.

நாய் வீட்டைக் காக்கும்.

நாயுடன் விளையாடலாம்.

நாய் நன்றி உள்ள பிராணி.



# புத்தகத்தின் சுயசரிதை

-டக்க்ஷா குமார் -

நான் ஒரு கிழிந்த பழைய கணிதப்புத்தகம். பல வருடங்களுக்கு முன் என்னை ஒரு பெரிய பிரம்மாண்டமான புத்தகத் தொழிற்சாலையில் உருவாக்கினார்கள். நான் அங்கு பல புத்தக நண்பர்களுடன் சந்தோசமாகவும் குதூகலமாகவும் இருந்தேன். பின்பு ஒரு நாள் அங்கு உள்ள வேலையாட்கள் எங்களை வெல்வேறு புத்தகக் கடைகளுக்கு அனுப்பப்போவதாக பேசிக் கொண்டதை நான் செவிமடுத்தேன். உடனே நான் இந்த அதிர்ச்சியான தகவலை எனது உயிர் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டேன். அவர்கள் இந்த விடயத்தைக் கேட்டவுடன் மிகவும் கவலைக்கு உள்ளானார்கள். நான் அவர்களை முடிந்த வரையில் சமாளிக்க முயற்சி செய்தேன்.

பின் ஒரு வாரம் சென்ற பின், நகமும் சதையுமாக இருந்த எங்களை பிரித்து வெவ்வேறு புத்தகக் கடைக்கு அனுப்பினர். நான் அங்கு மிகவும் வருத்தத்துடன் இருந்தேன். அங்கு நான் நண்பர்கள் சேர்க்க முயற்சி சிறிதும் எடுக்க வில்லை.

பின்பு சில நாட்கள், பல யுகம் போல் கழிந்தது. ஒருநாள் ஒரு அழகான சிறுமி வந்து என்னை 500 ரூபாய் பணம் கொடுத்து வாங்கிச் சென்றாள்.

நான் பிறந்ததற்கு முதன் முதலாக ஒருவருக்கு உதவியாக இருக்கப் போகின்றேன் என்பதை நினைத்து மகிழ்ந்தேன்.

அவள் என்னை அவளுடைய வீட்டிற்கு கூட்டிச்சென்று அவளுடைய பெற்றோரிடம் காட்டினாள். அவர்கள் என்னை வாங்கிப் பார்த்துவிட்டு "இது நல்ல கணித புத்தகம், நீ மிகவும் அதிஷ்டசாலி" என்று அந்த சிறுமியிடம் சிரித்துக்கொண்டு கூறினார்கள்.

பின்பு பல மாதங்களாக நான் அந்தச் சிறுமிக்கு கணித பரீட்ச்சைக்கு படிக்க மிகவும் உதவியாக இருந்தேன். பின்பு எனது கெட்ட நேரம் அந்தச் சிறுமி பாடசாலை செல்லும் வழியில் என்னைத் தவறுதலாக கீழே போட்டுச் சென்று விட்டாள். பின் ஒரு நாய் என்னை கடித்து துண்டு துண்டாக ஆக்கிவிட்டது. அது மட்டுமன்றி அந்தப் பாதையில் நடந்த எல்லோரும் என் மீது ஏறி பரிதாபம் பார்க்காமல் மிதித்து என்னை மன வேதனைக்கும், வலிக்கும் உள்ளாக்கினர்.

பின்பு ஒரு சுத்தம் செய்பவர் என்னை எடுத்து குப்பைத் தொட்டியில், எதற்கும் பயன்படாத ஒன்றை வீசுவதைப் போல் வீசினார். அன்றிலிருந்து நான் எதற்கும் பயனில்லாமல் கிழிந்து, மிதிபட்டு குப்பைத் தொட்டியில் உள்ளேன்.

# பண்டார வன்னியன்

-அங்கயன் மயூரன்-

இலங்கையின் வன்னி நிலத்தை ஆண்ட இறுதி மன்னன் பண்டார வன்னியன். இவர் கி.பி 1777ல் பிறந்தார். இவரின் இயற்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன். வீரத்திற்கு இலக்கணமாக விளங்கிய மன்னன். திறை செலுத்த மறுத்த காரணத்துக்காக படை எடுத்து வந்த வெள்ளையர்கள் புறமுதுகு காட்டி பின்வாங்கினார்கள்.

பலமுறை போரில் தோல்லியுற்ற வெள்ளையர்கள் வன்னியின் ஒரு குறு நில மன்னனான காக்கை வன்னியனுடன் கூட்டுச் சேர்ந்து தந்திரத்தால் வென்றனர்.

ஆவணி மாதம் 25ம் நாள் பண்டார வன்னியனின் நினைவுதினம் ஆகும். இவ் வீரத்தமிழனை நாமும் நினைவு கூறுவேம்.



# மனம் கவர்ந்த தமிழ்க் கவிஞர்

*-கி. லக்ஷிராம்-*

*இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார் ஆவார். இவரை பாரதி என்றும் அழைப்பார்கள். இந்த ஒப்பற்ற கவிஞர் தமிழ் மக்களால் இன்றும் மதிக்கப்படுகிறார். பாரதியார் ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளம், இந்தி போன்ற பல மொழிகளை பேசவும் எழுதவும் வல்லமை கொண்டவர். இந்த பன்மொழியறிஞர் பல்வேறு மொழி இலக்கணங்களையும் படித்துள்ளார். அவர் தமிழில் இருந்து பெற்ற இன்பத்தை வேறு எந்த மொழியில் இருந்தும் பெறமுடியாது என்று கூறினார்.*

*சுப்பிரமணிய பாரதி பதினொன்றாம் திகதி, மார்கழி மாதம், ஆயிரத்து எண்ணூற்று எண்பத்திரண்டாம் ஆண்டில் சின்னசுவாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன், ஆனால் அவரது குடும்பமும், நண்பர்களும் "சுப்பையா" என்று அழைப்பார்கள். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டில், பாரதியாரின் தாய் மறைந்தார். இதனால் பாரதியார் அவரது பாட்டியான பாகீரதி அம்மாளிடம் வளர்ந்தார்.*

*தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றி ஏழாம் ஆண்டில், செல்லம்மாளை மணந்தார். ஒரு வருடத்திற்குப் பிறகு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார். இதனை எட்டயபுரம் மன்னருக்கு தெரிவித்து, பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக் கொண்டார். பின்னர் எட்டயபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சில காலத்திலேயே அப்பணியை விடுத்து காசிக்கு சென்றார். ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று எட்டாம் ஆண்டு முதல் ஆயிரத்து தொள்ளாயிரத்து இரண்டம் ஆண்டு வரை அங்கு தங்கி இருந்தார். பின்னர், எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றில் பாரதியார் வாழ்ந்தார். ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்த பின்னர், ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்காம் ஆண்டில் மதுரையில் பாரதி எழுதிய பாடல் "விவேகபானு" இதழில் வெளியானது. வாழ்நாள் முழுவதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.*

*இவருடைய பாடல்களில் என்னை மிகவும் கவர்ந்த பாடல் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" ஆகும். இவர் புரட்டாதி பதினொன்றாம் திகதி ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்றாம் ஆண்டில் அவரது பிறந்த ஊரில் மறைந்தார்.*

*"தமிழா உனது வேலைகள் அனைத்திலுமே*

*பொய்க்கதைகள் மிதமிஞ்சி விட்டன.*

*உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர்.*

*உண்மை பரமாத்மாவின் கண்ணாடி.*

*அதனால் தமிழா, எல்லாச் செய்திகளிலும்*

*உண்மை நிலவும்படி செய்.*




# உங்களுக்கு தெரியுமா...?

இது ஒரு நச்சுத் தவளை. இதனை "Poison dart frog" என்று அழைப்பார்கள். தென் அமெரிக்காவின் மத்தியபகுதியின் வெப்பமண்டலப் பிரதேசங்களி-லேயே இவை வாழ்கின்றன. இதன் நஞ்சு ஒரு மனிதனின் உயிரை மூன்று நிமிடங்களில் கொன்றுவிடும். பல நிறங்களில் காணப்படும் இத்தவளைகளில் வானவில் நிறத்தவளைகள் மிகவும் அரியவை. நீரிலும் நிலத்திலும் வாழும் இவை சிறுபூச்சிகளை உண்ணும். இவை பொதுவாக இரண்டு அங்குலத்தைவிட சிறியவை.

பார்த்தீர்களா, கடுகு சிறிது காரம் பெரிதாகவுள்ளது.



அட்சரன் மயூரன்
ஆண்டு-2



நான்
தலை
கண்
காது
கை
கால்
பாதம்
முகம்
மூக்கு
வாய்
கழுத்து
விரல்
நெஞ்சு




மரம்
பூ
பட்டம்
முகம்

## அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்

*பல நண்பர்கள் இருக்கும் போது, உங்கள் உண்மையான சினேகிதனைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கலாம். சிலர் நல்லவர்களாக நடிப்பார்கள். ஆனால் ஆபத்து வரும் போது உங்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். இதனால் தான் எங்கள் முன்னோர்'' அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்'' என்று கூறினார்கள். ஆனால், உங்களிடம் இருக்கும் எல்லா நண்பர்களும் கெட்டவர்கள் இல்லை. பல சினேகிதர்கள் ஆபத்தில் உதவுவார்கள்.*

*ஒரு நாள் நான் எனது நண்பியுடன் ஒரு பூங்காவிற்குச் சென்றேன். அங்கு நாங்கள் மிகவும் சந்தோசமாக நடந்து திரிந்தோம். அங்கு இருக்கும் கடைகளுக்கு சென்று பல பொருட்களை வாங்கினோம். ருசியான சாப்பாட்டை வேண்டி சாப்பிட்டோம்.*

*ஆனால், நாங்கள் வீடு திரும்பும் போது, எனக்கு ஒரு ஆபத்து நேர்ந்தது. பெரிய நாய் ஒன்று என்னை நேக்கி ஓடி வந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் பயத்தால் உறைந்து போனேன். இதை கண்ட எனது நண்பி, எனக்கு முன்னால் பாய்ந்தாள். அவள் கையில் இருக்கும் பானையை நாயை நோக்கி எறிந்தாள். அந்த நாய் பயத்திலே மற்றப் பக்கம் திரும்பி ஓடியது. எனது நண்பியின் சமயோசித புத்தியாலும் முயற்சியாலும் நான் காப்பாற்றப்பட்டேன். ''**முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து அகநக நட்பது நட்பு**''*

## எனக்குப் பிடித்த செல்லப் பிராணி (நாய்) - *சிறானா*

*முன்னுரை*

*வீட்டில் வளர்க்கப்படும் விலங்கு இனம் மற்றும் பறவை இனம் செல்லப் பிராணி என அழைக்கப்படும். எனக்குப் பிடித்த செல்லப் பிராணி நாய் பற்றி எழுதுகிறேன்.*

*விரிவுரை*

*எனக்கு நாய் விருப்பம். ஆனால் என்னிடம் நாய் இல்லை. நாய் இருந்தால் அதற்கு மிக்கி என்று பெயர் சூட்டுவேன். எனக்கு மிக்கி மிகவும் அழகாக இருக்க வேண்டும். பால், எலும்பு என்பன அதன் விருப்பமான உணவுகள். எனக்கு மிக்கி மண் நிறத்தில் இருக்கவேண்டும். நான் எனது மிக்கியுடன் பந்து உருட்டி விளையாடுவேன்.*

*முடிவுரை*

*நாய் ஒரு நன்றியுள்ள பிராணி. அதனால்தான் அது ஒரு செல்லப்பிராணியாக வீட்டில் வளர்க்கப்படுகிறது.*

## எனது விடுமுறை - *நர்த்தனா ரஜீவன்*

*நான் சென்ற விடுமுறைக்கு அம்மா, அப்பா, அண்ணாவுடன் இலங்கைக்குச் சென்றேன். அங்கு அப்பப்பா, அப்பம்மாவுடன் தங்கினோம். அவர்களோடு கதிர்காமம் போனோம்.*

*பின்னர் ரயில் வண்டியில் யாழ்ப்பாணம் சென்றோம். ரயில் ஆடி அசைந்து போனது. வழியில் வயல்களையும் பனை மரங்களையும் கண்டேன்.*

*நல்லூர், நயினாதீவு, நகுலேசரம் போன்ற ஆலயங்களில் வழிபாடு செய்தோம். எமது உறவினர்களைச் சந்தித்தோம். யாழ் திரையரங்கில் விஸ்வாசம் படம் பார்த்தோம்.*

*திருக்கோணேச்சரம், சிகிரியா பார்த்த பிறகு கொழும்புக்கு திரும்பினோம். எனக்கு இலங்கைக்கு சுற்றுலா செல்ல மிகவும் விருப்பம்.*

## என் செல்லப் பிராணி

-வினித் கனேசன்-

எனது செல்லப் பிராணி மிகவும் அழகானது. அது என்னுடன் மிகவும் அன்பாக இருக்கும். என்னைக் கண்டால் ஓடி வரும். என்னுடைய செல்லப் பிராணி மிகவும் சுட்டித்தனமான குரும்புக்காரக் குட்டி. இது எப்பொழுதும் என்னுடைய வீட்டில் உள்ள அப்பா, அம்மா, தங்கை, தம்பி அனைவருடனும் அன்பாக இருக்கும். என் வீட்டின் காவற்காரன் இவனே. இவன் எப்பொழுதும் என் வீட்டை காவல் பாரத்துக்கொண்டே இருப்பான். இவன் மிகவும் அழகான நிறத்தோடு மிகவும் கூர்மையான காதுகளும் கொண்டவன். இவன் யார் தெரியுமா?

இவன்தான் என் செல்லக்குட்டி'' ஜிம்மி''. இவன் மிகவும் மென்மையான அடர்த்தியான முடியினை கொண்ட என் ஜிம்மி வீட்டிற்கு வருவோரை பார்த்து'' வவ்'' , ''வவ்'' எனக் குரைக்கும். யார் என்று தெரிகிறதா? இவன்தான் என் அன்புத் தோழன், என் செல்லக்குட்டி நாய்

''ஜிம்மி

''வவ்'', ''வவ்''

-------------------------------------

## பொறாமையின் விளைவு

-பிரதிபா பாலாஜி-

ஒரு நாட்டின் ராஜா ஒரு யானை வளர்த்தார். அந்த யானை அன்பாக இருந்தது. அதற்கு ராஜா நல்ல சாப்பாடும், தங்க இடமும் கொடுத்தார்.

ஒரு நாள் ராஜாவும் சகோதரர்களும் வேட்டையாடும் போது ஒரு அடிபட்ட யானையை பார்த்தார்கள். அந்த யானையை ராஜாவின் அரசாங்கத்திற்கு கூட்டிப் போனார்கள். தூங்கிக் கொண்டிருந்த ராஜாவின் யானை புதிய யானையைப் பார்த்தது. காட்டு யானையின் காயத்தையும் பார்த்தது.

சில நாட்களுக்கு ராஜா காட்டு யானையை செல்லமாய் பார்த்துக் கொண்டார். ராஜாவின் யானைக்கு கோபம் வந்துவிட்டது. இதனால் கோபமுடன் அந்த காட்டு யானையுடன் சண்டை போட்டது. இதனால் ராஜாவின் உத்தரவுடன் வீரர்கள் கோபமான யானையை காட்டுக்குத் துரத்தினார்கள். இப்பொழுது ராஜாவின் யானை காட்டுக்குப் போய் அழுதது.

பொறாமை குணத்தால் நமக்கு தீயவைகள் உண்டாகும்.

## விளையாட்டுப் போட்டி

விளையாட்டு எங்களை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ள உதவும்.

நிறைய விளையாட்டுப் போட்டிகள் உள்ளன.

ஓட்டம், தூரம் பாய்தல், நீச்சல் போட்டி போன்ற பல போட்டிகள் உள்ளன.

ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியும் வீரியமாகவும் குதூகலமாகவும் இருக்கும்.

எனக்கு விருப்பமான விளையாட்டுப் போட்டி நீச்சல் போட்டி மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டி போன்றவை ஆகும்.

## வீட்டுத்தோட்டம்

-விகாஷினி முருகானந்தா-

எனது வீட்டுத்தோட்டத்தில் பல வகையான ரோசா மரங்கள் உள்ளன. இவை சிவப்பு, வெள்ளை, மஞ்சள், மென் சிவப்பு நிறங்களில் மலர்கள் மலரும். இது மட்டுமல்ல பயன்தரும் பழ மரங்களும், காய் கறிகளும் உள்ளன.

தோடம்பழம், மாதுளம்பழம் போன்ற உடலுக்கு ஆரோக்கியமான பழமரங்கள் எனது வீட்டுத் தோட்டத்தில் உள்ளன.

பச்சை நிற கீரைவகைகள், கறிவேப்பிலை என்பனவும் உள்ளன. நான் தினமும் எனது யாலை வடிவத்திலான நீர் வாளியினால் நீர் விடுவேன்.

எழுத்துக்களை இணைத்துச் சொற்கள் உருவாக்குவேன்.

| | | |
|---|---|---|
| ப, க, பா, வா | ல் | பல், கல், பால், வால் |
| தா, நா, கா, பா | ய் | தாய், நாய், காய், பாய் |
| தா, கா, சா, மா | யம் | தாயம், காயம், சாயம், மாயம் |

ஆக்கம் :- சுபகா. சுதர்சன்
(Bharathi academy, Berwick)
Gr: 01

அன்பு



இந்த சின்ன குட்டி குரங்கு எனது செல்லப் பிராணி. இதன் பெயர் "அன்பு". எனக்கு அன்பு என்றால் அளவு கடந்த விருப்பம். அன்பும் நானும் தினம் தினமும் விளையாடுவோம்.

— வர்ஷ்னா ஜனந்தன் —

## எனது கிளி

- சகானா-

ஒரு நாள் ஒரு கிளி எனது வீட்டு வாசலில் இருந்தது.

ஒரு கிழமையாக அந்த கிளி எங்கள் வீட்டு வாசலில் இருந்தது.நான் அந்த கிளியை வீட்டுக்குள் கொண்டுபோனேன். அதற்கு தண்ணீர் கொடுத்தேன். பின்பு அப்பாவிடம் அதற்கு ஒரு சிறு கூடு வாங்கச் சொன்னேன். நான் “அப்பா” என்று சொல்ல கிளி தானும் “அப்ப” என்று சொன்னது. நான் அதிர்ச்சி அடைந்தேன். நான் கதைக்கச் சொல்லிக்கொடுத்தேன். ஒரு நாள் என்னுடைய கிளி “ ற ற “ என்று ஒலம் இட்டது. உடனே நான் பயந்தேன். பின்பு தான் நான் ஒரு புலி நிற்பதைப் பார்த்தேன். நான் அப்புலியைக் கொன்றேன்.

## எனது நோய்வாய்ப்பட்ட மீன்

-சாதனா-

நான் இரவுச் சாப்பாடு சாப்பிடும் பொழுது எனது முன்னால் மாடு கத்தும் சத்தம் கேட்டது. பிறகு ஆடு கத்தும் சத்தங்கள் கேட்டது. நான் எனது மீனிடம் போனேன். “ என்ன பிரச்சனை ?”என்று கேட்டேன். எனது மீன் ஒரு சத்தமும் செய்யவில்லை. பிறகு பன்றி சத்தங்கள் செய்தது. பிறகு நான் எனது மீனை வைத்தியசாலைக்கு கொண்டு போனேன் . அந்த வைத்தியர் மருந்து கொடுத்தார். நான் வீட்டிற்கு போன உடனும் எனது மீனுக்கு மருந்து கொடுத்தேன். சில வாரங்களின் பின்பு உடல் நலம் தேறி வந்தது.

## ஒரு நாள் ஒரு முயல் !!!

-மது பரராசசிங்கம்-

நான் ஒரு நாள் எனது பாட்டியின் வீட்டுக்கு செல்ல ஆயத்தமாகும் பொழுது எனது அம்மா என்னிடம் சில பழங்களை கொடுத்து அதை பாட்டியிடம் கொடுக்குமாறு சொன்னார். நான் அம்மா கொடுத்த பழங்களை எடுத்துக் கொண்டு பாதையின் ஓரமாக நடந்து சென்றேன். அப்பொழுது நான் ஒரு முயலைப் பார்த்தேன். அது பாதையின் ஓரத்தில் காலில் காயங்களுடன் படுத்திருந்தது.அதைப் பார்த்தவுனேயே நான் அதை தூக்கி அணைத்துக் கொண்டேன்.

அந்த முயல் கிடைத்த சந்தோஷத்தில் முயலை அணைத்தப்படி பாட்டியின் வீட்டுக்கு ஓடிச் சென்று பாட்டியிடம் காட்டினேன். பாட்டி அந்த முயலின் கால்களுக்கு மருந்து வைத்து கட்டிவிட்டார். நான் என் முயலுக்கு சாப்பாடு கொடுத்தேன் பின்னர் அந்த முயலை எனது வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். எனது அப்பா , அம்மா, அதைக் காட்டி மகிழ்ந்தேன். பின்னர் அந்த முயலை நான் என்னுடனேயே வளக்க ஆரம்பித்தேன்.

## அவுஸ்திரேலியா !!!!

-சரன்ராம் கிரிதரன்-

அவுஸ்திரேலியா உலகின் மிகச் சிறிய கண்டம்.

அவுஸ்திரேலியாவில் ஆறு மாநிலங்கள் உள்ளன.

அவுஸ்திரேலியாவின் தலைநகரம் கான்பரா.

மேற்கு அவுஸ்திரேலியாவின் தலைநகரம் பேர்த் .

தாஸ்மானிய நகரின் தலைநகரம் ஹோபாட்.

விக்டோரிய தலைநகரம் மெல்போர்ன்.

தெற்கு அவுஸ்திரேலியாவின் தலைநகரம் டார்வின்.

அவுஸ்திரேலியாவின் நிலபரப்பில் மத்திய பகுதி வறண்ட பாலைவனமாகும்.

அவுஸ்திரேலியாவில் நிறைய அரிய வகை மிருகங்கள் உள்ளன.

அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்கு கங்காரு ஆகும் .

## நமக்கு உதவுவோர்.

-ஹரினி திவாகர்-

விவசாயி நமக்கு உண்ண உணவு தருவார்.

வைத்தியர் நோய்களுக்கு மருந்து தருவார்.

போலிஸ்காரர் நமக்கு பாதுகாப்பு தருவார்.

ஆசிரியர் நமக்கு பாடம் கற்றுத்தருவார்.

தபால்காரன் தபால்களை நமக்கு தருவார்.

இவர்கள் எமக்கு மிகவும் உதவுவார்கள்.


# தங்க மீனும் நானும்

நானும் எனது நண்பன் விதுஜனும் சேர்ந்து ஒரு நாள் சந்தைக்கு போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. இருவரும் ஒன்றாக கை கோர்த்தபடி பல கதைகளைப் பகிர்ந்தோம். அதே நேரம் எமக்கான பொருட்களையும் வாங்கிய வண்ணமிருந்தோம்.

அப்பொழுது ஒரு மூலையில் எனது கண்களில் தென்பட்டவையே எனக்குப் பிடித்த தங்க மீன்கள். நானும் வினுஜனும் சேர்ந்து அந்தக் கடைப்பக்கமாக நகர்ந்து அதன் அழகை ரசித்த வண்ணம் இருந்தோம். எனக்கு அந்த மீன்கள் மேல் என்னை அறியாமலேயே ஒரு பிரியம் வந்துவிட்டது. இதில் இரு மீன்களை அந்த வியாபாரியிடம் இருந்து பேரம்பேசி வாங்கி வந்தோம். அதன் பின்பு இரு மீன்களையும் நான் நான்கு பக்கமும் கண்ணாடியால் ஆன தொட்டியில் நிறைய நீரை விட்டு எனது தங்க மீன்களையும் அதில் விட்டு வளர்த்தேன். அதற்கு ஒவ்வொரு நாளும் உணவை வைத்து அதனுடன் சில நிமிடங்கள் பேசுவேன் அதுவும் நீர் மேல் வந்து என்னுடன் பேசுவதைப் போல உணர்ந்தேன். இதை நான் எழுந்தவுடன் ஒவ்வெரு நாளும் செய்வேன். இதைக் கவனித்த எனது அம்மா

''ஒரு படிப்பும் இல்லை ஒன்றும் இல்லை மீனுடனேயே இரு ''

என்று என்னைப் பேசுவார். ஆனாலும் நான் மீனுடனே இருப்பேன்.



# ஆரோக்கியமே செல்வம்

திருடர்களிடமிருந்து நமது செல்வத்தை பாதுகாக்க காவலாளிகளை நாங்கள் வைத்திருக்கிறோம். இதே போல நம் ஆரோக்கியத்தை நோயிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

உடற்பயிற்சி நமது ஆரோகியத்தைப் பாதுகாக்கிறது. சரியான உடற்பயிற்சி இல்லாமல் நல்ல ஆரோக்கியம் சாத்தியமற்றது. உடற்பயிற்சிகள் நோய்களைத் தடுக்கின்றன. உடற்பயிற்சி மூலம் குணப்படுத்தக் கூடிய சில நோய்கள் உள்ளன.

வெவ்வேறு மக்கள் பல்வேறு பயிற்சிகள் செய்கிறார்கள் இது அவர்களின் உடல் அமைப்பு மற்றும் அவர்களைப் பொறுத்தது. காலை நடைப்பயிற்சி மற்றும் மாலை நடைப்பயிற்சி பரிந்துரைக்கப் படுகிறது. ஆனால் பலவீனமானவர்கள் ஜிம்னாஸ்டிக் செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இலவச பயிற்சிகள் அனைத்தும் எளிதாக பள்ளிகளிலும் , கல்லூரிகளிலும் , வெளிப்புறவிளையாட்டு மைதானத்திலும் உள்ளன. போட்டிப் பரீட்சைக்கு தயார் செய்வதில் மாணவர்கள் மும்முரமாக உள்ளனர், அவர்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவில்லை. நல்ல உணவு மட்டும் அவர்களுக்கு ஆரோக்கியமாக இருக்கும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். ஆனால் அது தவறு, தவறான யோசனை.

அவர்கள் ஆரோக்கியமாக மற்றும் வலுவாக இருக்க முடியும். அவர்கள் உன்மையாக உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

# எனது தாய் நாடு

-மைத்திரீ-

எனது தாய் நாடு இலங்கை.

அது ஒரு அழகான தீவு.

இதனை இந்து சமுத்திரத்தின் முத்து எனவும் கூறுவர்.

இங்கு சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாகும்.

அது எல்லா மக்களாலும் விரும்பப்படும் ஒரு சுற்றுலா இடமும் ஆகும்.

# நட்பு

*" செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்*

*வினைக்கரிய யாவுள காப்பு "*

*என்று நட்பின் பெருமையை திருவள்ளுவர் அருளிய திருக்குறள் கூறி நிற்கிறது. நட்பு எமது வாழ்வில் விலை மதிக்க முடியாதது ஒன்றாகும். ஆனால் நல்ல நட்பு கிடைப்பது மிகவும் கடினம்.*

*ஒருவரது வாழ்வில் நட்பு மிகவும் முக்கியமானது. நம்பிக்கை நேர்மை இரண்டும் சேர்ந்ததே சிறந்த நட்பு ஆகும். கடின வேளையில் கை கொடுப்பது உயர்ந்த நட்பு ஆகும். சிறந்த நட்பு நண்பர்களின் உயர்வில் பொறாமை கொள்ளாது. நட்பு எமது வாழ்வை மகிழ்ச்சியாக்க உதவும். உணமையான நண்பர்கள் தம்மிடையே வரும் சிறு சண்டைகளை தவிர்த்து தமது நட்பை வலிமை ஆக்கவேண்டும்.*

*உலகில் உள்ள சிறந்த செல்வங்களில் நட்பும் ஒன்றாகும். இறுதிவரை தொடரும் நட்பு நமக்கு வாழ்வில் கிடைத்த வரம் ஆகும்*

# எனது வீட்டுத்தோட்டம்

*-அத்விகா கமலகீதன்-*

*எனது வீட்டுத் தோட்டம் அழகானது. அதை நான் மிகவும் நேசிக்கிறேன். எனது வீட்டுத்தோட்டத்தில் கத்தரிச் செடி , மிளகாய்ச் செடி, வெண்டிச் செடி, கீரை வகைகள் போன்றவை உள்ளன. இக்காய்கறிகளையும் பழங்களையும் , பூவில் உள்ள தேனையும் உண்பதற்காக பல வகையான பறவைகள் வந்து போகின்றன. அதைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.*

*நான் எனது வீட்டுத்தோட்டத்தில் வளரும் காய்கறிகளையும் பழங்களையும் விரும்பி உண்கிறேன். நான் எனது வீட்டுத்தோட்டத்தை பொழுதுபோக்கிற்காகச் செய்கின்றேன். எனது வீட்டுத்தோட்டம் பச்சைப் பசேல் என்று காட்சி தருவதோடு நல்ல குளிர்ச்சியான காற்றையும் சுவாசிக்க உதவுகிறது.*

# நண்பன்

*-முதல் நாள் பாடசாலை-*

*ஒற்றைக்கையால் என் தாய் கையை விடாமல் பிடித்தேன்.*

*தாயைப் பிரிய மனம் இல்லை.*

*உனது இடது கையில் என் கரம்.*

*வலது கையில் இனிப்புப் பண்டம்.*

*எனது தாய் கையை விட்டு அவனை நாடியது என் கரம்.*

*அன்றிலிருந்து தோழனானோம்.*

*இன்று வரை ஓயவில்லை அந்நட்பு.*
*வெவ்வேறு கண்டங்களில் இருந்தாலும்*
*யோசனையோ உன்னிடத்தில்.*

*எப்பொழுது வருவாயென காத்திருக்கிறேன் கடற்கரையோரம்.*

*-நிஷாந்தன் சேனாதிராசா-*

# தோட்டங்கள்

*-சாத்விகா பாலாஜி-*

*எனக்கு தோட்டங்கள் பிடிக்கும்.*

- *மலர்த் தோட்டம்*
- *கய்கறித் தோட்டம்*
- *பழத் தோட்டம்*
- *பச்சைத் தாவரங்களின் தோட்டம்*

*தோட்டங்கள் வளர்ப்பதால் நன்மைகள் உண்டாகும். நமக்கு நிறைய காய், கனிகள் கிடைக்கும். வீட்டுத் தோட்டத்தில் விளையும் தாவரங்கள் பெரும்பாலும் சமையலுக்கு ருசியை கொடுக்கும். என் வீட்டில் வரும் கீரைச் செடியும், ஆப்பிள் மரமும் எனக்கு மிகவும் பிடித்தவை.*

# நான் கழித்த விடுமுறை நாட்கள்...

*-சுபிக்ஷா பிரபாகரன்-*

*வெள்ளிக்கிழமை 19ம் திகதி, ஏப்ரல் மாதம் நானும் எனது தம்பியும் மிக மகிழ்ச்சியுடன் விடுமுறைக்கு புறப்பட்டோம். நாங்கள் ஈடன், நியூ சவுத் வேல்ஸ் எனும் இடத்திற்கு சென்றோம். எனது அத்தை குடும்பமும் அங்கு வந்தனர். நாம் எல்லோரும் கடற்கரையில் விளையாடினோம். அப்பாவின் பிறந்த நாளை கொண்டாடினோம். நான் மிக்க சந்தோசமாக எனது விடுமுறையை முடித்து வீடு திரும்பினேன்.*



# தங்க மீன்


*செ.காவ்யா- பாரதி பள்ளி*

*ஒரு நாள் காலை நான் வீட்டின் யன்னலோரம் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென குளிர்காற்று வீசியது, வானம் கறுத்தது, இடியுடன் கூடிய மழை "சோ" என பெய்தது. பின்பு நான் நிலத்தை பார்த்தபோது மழை நீரில் ஒரு மீன் துடித்துக்கொண்டிருந்தது.*

*உடனே நான் ஒரு நீர்ப்பாத்திரத்தினுள் அந்த மீனை எடுத்துவந்து எனது மீன்தொட்டியில் விட்டேன், அன்று முதல் நாம் நண்பிகளானோம்.*

*ஒருநாள் நான் படித்துக்கொண்டிருக்கும் போது, முன் விறாந்தையில் இருந்து" காவ்யா காவ்யா" என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. நான் விறாந்தைக்கு ஓடிப்போனேன், அங்கே எவரையும் காணவில்லை. பின்பும் அதே சத்தம் என் பினால் கேட்டது. திரும்பிப் பார்த்தேன், மீன் தொட்டியில் இருந்த தங்கமீன் என்னைக் கூப்பிட்டது. நான் அதிர்ச்சியுடன் அருகே சென்றேன். அது துள்ளிப்பாய்ந்து என் கையைத் தொட்டது. அதன் பின் அந்த மீன் ஒரு பெண்ணாக மாறியது.*

*அப்பொழுது நான் வாய் பேசமுடியாமல் அதிர்ச்சியுடன் நின்றேன்.அப்பொழுது அந்த சிறுமி பயப்படாததே நான் உன் நண்பியாக இருப்பேன் என்றது. அதன் பின் நாம் சந்தோசமாக ஒழிந்து விளையாடிக்கொண்டிருந்தோம். அப்பேது அம்மா என்னைக் கூப்பிட்டார். நான் எனது நண்பியை கேட்டேன் " நீ மீனாகவே மாறிவிடு என்று" ஏனென்றால் என் அம்மா உன்னைப் பார்த்து பயந்துவிடுவார் என்று. உடனே நண்பி தங்க மீனாக மாறிவிட்டாள் . அன்றிலிருந்து தங்க மீனும் நானும் உயிர்த்தோழிகளானோம்.*




# வீரா

*அனன்யா – பாரதி பள்ளி*

*எனது செல்லப்பிராணி நாய்க்குட்டி. அதன் பெயர் வீரா. வீராவின் நிறம் கறுப்பும் வெள்ளையும். அது மிகவும் சுட்டியானது. வீராவுக்கு பிடித்த உனவு ரொட்டி. வீரா தண்ணீர் குடிப்பாள். வீரா பஞ்சு போல இருப்பாள்.*

*ஒரு நாள் வீராவுடன் பூங்காவுக்குப் போனேன். பூங்காவில் நான் இன்னொரு நாய்க்குட்டியை நான் அதன் எஜமானுடன் பார்த்தேன். நான் எஜமானுடன் கதைத்துக் கொண்டிருந்தேன் திடீரென எங்கள் நாயைக் காணவில்லை. எனக்கு அழுகை வந்துவிட்டது. பூங்கா முழுவதும் தேடினோம் வீராவைக் காணவில்லை.*

*எனக்கு ஒரு யோசனை தோன்றியது, எனது கைப்பையில் இருந்த சில ரொட்டி துண்டுகளை புற்தரையில் வைத்தேன். சில நொடிகளில் வீரா எங்கிருந்தோ ஓடிவந்து ரொட்டிதுண்டுகளை தின்னத்தொடங்கியது.எனது யோசனை பலித்தது. நான் வீராவை மகிழ்ச்சியுடன் கட்டி அரவணைத்தேன். பின்னர் நாங்கள் வீடு வந்தோம்.*

# பொறாமையின் விளைவு

*-பிரதீபா பாலாஜி-*

*ஒரு நாட்டின் ராஜா ஒரு யானை வளர்த்தார். அந்த யானை அன்பாக இருந்தது. இதுக்கு ராஜா நல்ல சாப்பாடும், தங்க இடமும் கொடுத்தார்.*

*ஒரு நாள் ராஜாவும் சகோதரர்களும் வேட்டையாடும் போது ஒரு அடிபட்ட யானையை பார்த்தார்கள். அந்த யானையை ராஜாவின் அரசகத்திற்கு கூட்டிப் போனார்கள். தூங்கிக் கொண்டிருந்த ராஜாவின் யானை புதிய யானையைப் பார்த்தது. காட்டு யானையின் காயத்தையும் பார்த்தது.*

*சில நாட்களுக்கு, ராஜா காட்டு யானையைச் செல்லமாய் பார்த்துக் கொண்டார். ராஜாவின் யானைக்கு கோபம் வந்து விட்டது. இதனால், கோபமுடன் அந்த நாட்டு யானையுடன் சண்டை போட்டது. இதனால் ராஜா உத்தரவுடன், வீரர்கள் கோபமான யானையை காட்டுக்குத் துரத்தினார்கள். இப்பொழுது ராஜாவின் யானை காட்டுக்குப் போய் அழுதது.*

*பொறாமை குணத்தால் நமக்கு தீமை உண்டாகும்.*

# எனது வீடு

*-அயானி புவிதரன்-*

*எனது வீட்டில் அப்பா, அம்மா, அண்ணா, நான் இருக்கிறோம்.*

*எனது வீட்டில் நான்கு அறைகள் இருக்கின்றன.*

*எனது வீடு மிகவும் பெரியது.*

*எனது வீட்டில் தோட்டம் இருக்கின்றது.*

*எனதுவீடு மிகவும் அழகாக இருக்கும்.*

*வீட்டை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.*

# சுத்தமான மின்சக்தி.

*-அய்சானி முருகானந்தா-*

*டீசல் , நிலக்கரி மற்றும் அணு உலை போன்ற இரசாயனங்களை உபயோகித்து மின்சக்தியை உருவாக்குகிறது எமது சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது மனிதர்களுக்கு மட்டுமன்றி தாவரங்கள் மற்றும் எல்லாவகையான உயிரினங்களுக்கும் ஆபத்தானது.*

*சூரிய ஒளி, காற்று, கடல் அலை போன்ற இயற்கை வளங்களைப் பயன்படுத்தி சுத்தமான மின்சக்கியை உருவாக்கலாம்.இது எமது சூழலுக்கு உகந்தது. இன்றைய தொழில்நுட்ப உலகத்தில் சுத்தமான மின்சக்தியை உபயோகிப்பதை உலக நாடுகளின் தலைவர்களும் இயற்கையை நேசிப்பவர்களும் ஊக்கிவிக்கின்றனர்.*

*நாங்களும் இதனை ஊக்கிவிப்போமா?*

# கழுதையும் குதிரையும்


*ஒரு நாள், கழுதை நதி பக்கத்தில் எஜமானாருக்கு காத்திருந்தது. அப்பொழுது ஒரு அழகான குதிரை வந்தது. இந்த குதிரை வெள்ளை நிறமாகவும் மற்றும் நீளமான முடியையும் கொண்டிருந்தது.*

*கழுதை குதிரையை பார்த்து சொன்னது, "ஆ.. ஆ.. நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாயே" என்றது. "ஆமாம். நான் தான் அழகு" குதிரை சொன்னது. அப்பொழுது கழுதையுடன் ஒரு எஜமானார் வந்தார். துணிகளை கழுதைக்கு மேல் போட்டு விட்டு சென்றார். கழுதை நினைத்தது எவ்வளவு சாப்பாடு அந்த குதிரைக்கு கிடைக்கும்? அப்பொழுது கழுதை நினைத்தது நான் மிக அதிர்ஷ்டம் உடையது என்று சந்தோஷப்பட்டது.*

*குதிரை நினைத்தது அழகு இல்லை என்றாலும் கழுதைக்கு நல்ல சாப்பாடு, நல்ல வீடு எல்லாம் கிடைக்கும். இப்படியே குதிரை சோகமாக உறங்கியது. ஆனால் கழுதை சந்தோசமாக உறங்கியது. வெளியே உருவத்தை வைத்து ஒருவரை கணிக்கக் கூடாது.*

# குறுக்கெழுத்துப் புதிர்

*-சாருகா சிவசுதன் -*



**குறுக்காக**

1. *Instrument* என்பதன் தமிழ் சொல்
2. *நிலவு – இரவு , சூரியன் - ?*
5. இதில் பழங்களும் காய்கறிகளும் வளர்க்கலாம்
8. விளையாட்டுப் பொருள்
9. வரிகள் உள்ள மிருகம்
11. செய்தி தாள்கள்
15. இது செய்தால் தண்டிக்கப்படுவீர்கள் *( குழம்பியுள்ளது)*
17. திசைகாட்டியில் அம்புகுறி காட்டும் திசை.
18. காற்றாடி
20. சித்திரைக்குப் பின் வரும் மாதம்

**மேலிருந்து கீழாக.**

1. ஒரு பழம்
3. விறகு எரித்த பின் வரும்/யானை
4. யானைக்கும் பிள்ளையாருக்கும் இது பொதுவானது.
6. *Building* என்பதன் தமிழ்ச் சொல்
7. இதை வீட்டிலும் திரையரங்கிலும் பார்க்கலாம்
8. இது போனால் சொல்லும் போச்சு
10. *மாடு- கொம்பு , மயில் - ? ( குழம்பியுள்ளது)*
12. *அலங்காரத்திற்குப தைப்பொங்கலில் பாவிக்கப்படுகிறது.*
13. *கூர்ப்பில் எங்களின் முன்னோர்.*
14. தெற்கு இதற்கு ஒரு உதாரணம்
16. *ஆலயத்தில் இருப்பார்கள்( குழம்பியுள்ளது)*

19. *நடக்க அவசியமானது ( குழம்பியுள்ளது)*

# "மறையின் மகத்தான உருவம் அங்கோர்வாட்


# மனங்களில் மங்காத அருவம் பத்மசிறீ"

*தமிழ் மொழிப் பாவனையை ஊக்குவிப்பதாயினும், தமிழர் பண்பாட்டை புலம்பெயர் மக்களிடம் அறிமுகம் செய்வதாயினும், அதை தக்கவைப்பதாயினும் சரி கேசி தமிழ் மன்றம் ஒரு உந்து சக்தி உடனேயே முன்னோடியாக செயற்பட்டு வருகின்றது. இவ்வாறான வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற முயற்சிகளில் கைகூடப் பெற்றவைகளில் இளவேனில் சஞ்சிகையும் ஒன்று. இச்சஞ்சிகை பல இலை மறை காயாக இருக்கின்ற எழுத்தாளர்களுக்கு தன்னை தளமாக தாரைவாற்று வருகின்றது. இவ்வாறு இலைகளிடையே கனியாய் இருந்த ஒருவர் தான் கேசி தமிழ் மன்றத்தின் மூத்த உறுப்பினர் அமரர் பத்மசிறி.*

*2012ல் "மாதா கோவில் மணி ஓசையோடு" சஞ்சிகையில் தனது முதல் பிரதேசத்துடன் அறிமுகமாகி வாசகர்களுக்குக் கணீர் ஓசையை இசை மீட்டியவர். அவர் தொடர்ந்தும் ஆறு ஆண்டுகளாக பேனாவோடு பேசி பல அனுபவப் பகிர்வுகளை தாள்களில் பதித்திருந்தார். அவை இளவேனிலூடு இல்லங்கள் சேர்ந்தன. மூன்று தசாப்தங்களைப் பின்னகர்த்தி மணியோசையை எம் காதுகளில் உணரச் செய்து தனது 5 ஆம் ஆண்டு முதல் புலம் பெயரும்வரையான புதுமையான அனுபவத்தை எழுதி இருந்தார். அடுத்த ஆண்டின் 2013 ஜூலை இளவேனிலில் ஆலென வளர்ந்து அந்நிய தேசம் முழுதும் விழுதுகள் பரப்பி வாழும் தமிழினத்தில் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த ஒரு விழுதாக தனது பள்ளிப் பருவத்தில் பாடசாலையில் மரம் நட்ட சம்பவத்தை சுவாரசியமாக எழுதி இருந்தார். பல ஆண்டுகளின் பின்னர் நட்ட மரம் ஓங்கி நின்றதைப் பார்த்துவிட்ட பூரிப்பையும், ஆலங்குச்சியில் பல் விளக்கிய அனுபவத்தையும் பதித்திருந்தார். தொடர்ந்து வந்த ஆண்டில் "மண்டலாய் அப்புவெனும்" சுவாரசியமான மனிதனை சந்தித்த நிகழ்வுகளையும், புத்தகங்கள் பலவற்றை அவரிடம் வாங்கிப் படித்த அனுபவத்தையும், அந்த மூத்தவரின் வரலாறுகளின் ஒரு பகுதியினையும் எழுத்துருவாக்கம் செய்தது மட்டுமல்லாது அவரை மீண்டும் சந்திக்க வேண்டும் என்ற அவாவில் அவரை தேடி சென்றதையும் பகிர்ந்திருந்தார்.*

*இவ்வாறு 2015ல் தை மாதம் வெளியாகிய இளவேனில் சஞ்சிகையில் ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் ஒன்றை இணையத்தில் இருந்து படித்ததாயும் அது இளம் தலைமுறையினருக்கு என்ன கருத்தினை சொல்கின்றது என்பதையும் தமிழில் மொழிபெயர்த்து தந்திருந்தார். அதைத் தொடர்ந்து 2017 ஆடி மாத இதழில் "சைக்கிள்" என்னும் தலைப்பிட்டு சிறுபராயத்தில் சைக்கிள் ஒன்று ஓடவேண்டும் என்ற அவாவையும், ஒரு சைக்கிளில் கிடைத்த பின்னரான குதூகலத்தையும், மற்றும் தனது சைக்கிளில் உலாவந்த அனுபவத்தையும் இனிமேலும் சைக்கிள் ஓடவேண்டும் என்கின்ற ஆசையும் வெளிப்படுத்தியிருந்தார்.*

*இவ் அனுபவப் பதிவுகளை வாசிக்கும் வாசகர்களுக்கு தத்தமது அனுபவங்கள் கண்முன் விரியும் என்பதில் ஐயமில்லை. இறுதியாகத் தாய்லாந்தில் உள்ள பனை மரத்தைப் பார்த்ததும் சிந்தையில் படர்ந்த பழைய நினைவுகளில் பனை மரத்தைப் பற்றிய ஒரு கதையைச் சொல்லி இருந்தார். இந்தக் கதையை தொடர்வதாக உத்தேசித்திருந்தார் அவருக்கும் தெரியாது காலன் கண் வைத்தது. இதனை எழுதமுன் பட்டுப் போனான் பத்மசிறீ.*




***பத்மசிறீயின் ஆக்கங்கள்.***

- ***2012 ஜூலை மாத கோவில்***
- ***2013 ஜூலை விழுதுகள் எங்கே***
- ***2014 ஜூலை மண்டலாய் அப்பு***
- ***2015 ஜனவரி ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம்***
- ***2017 ஜூலை சைக்கிள் அனுபவப்பகிர்வு***
- ***2018 ஜூலை பனைமரம்***

# திரும்பி வா!

**-தே. பகிரதன் -**

*இலைகள் மறைத்த காய், கனிகின்ற பொழுதுகளில் காலன் கண்கள் பட்டதும் ஏனோ?*

*நெடுந்தூரப்பயணம் வழிநெடுவே*
*சோலைகள் சில பாலைநிலம் பல*
*பட்டமரம் பார்க்கையில்*
*நீரூற்றித் துளிர் பார்த்தான்*
*பாதியில் பட்டுப்போகும்*
*தரு தானென்றறியாமல்*

*உள்ளுணர்வில் ஊரிருத்தி*
*ஒளிவிளக்காய்த் தானிருந்து*
*தேட்டம் தேட வெளிநகர்ந்து*
*குளிர் தாங்கி குடும்பம் வளர்த்தான்*

*இளவேனில் இளங்காற்று*
*மெல்லச் சொன்னது*
*இவன் கதை ஆறாண்டாய்*
*இட்ட விதை மரமாகி*

*இலையசையும் பொழுதெல்லாம்*
*இருபுறமும் பேசிக்கொள்ளும்*
*இவன் இரங்கலைப் புலம்பலாய்*

*ஏனோ இப்படி*
*இடையில் விட்டாய்?*
*ஏக்கம் எம்மில்*
*ஏதோ விதியென்று விடவா?*

*ஒற்றைவழிப்பயணம்*
*ஒருவரும் திரும்பியதில்லை*
*தெரிந்தும் கேட்கிறோம்*
*திரும்பி வா!*

***இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*:**

**Casey Tamil Manram**
**PO Box 2516,**
**Fountain Gate,**
**Vic 3805**

***மின்னஞ்சல்*: editor@caseytamilmanram.org.au**

# THE MANGO TREE

## CATERING SERVICE

# (03) 9791 1111




**WE DO IT ALL...**

**BIRTHDAY PARTIES, ANNIVERSARIES, WEDDINGS & ANY SPECIAL OCCATIONS**

**SPECIAL RATES AVAILABLE FOR: "ARANGETHRAM" FUNCTIONS**

For more details Contact :

**12 CLOW STREET, DANDENONG VIC 3175**

(03) 9791 1111 | 0403 058 808

W: mangotreecaterers.com.au